Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 18 வெள்ளிக்கிழமை (03.07.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 276

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்

உயர்தரத்துடனும்

குறைந்த செலவுடனும்

குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628


Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,

பஸ்ரியன் சந்தி,

யாழ்ப்பாணம்.

## மக்களை ஏமாற்றுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



(யாழ்ப்பாணம்)

தமது தேவைகளுக்காகவும் வெறும் அரசியல் காரணங்களுக்காகவும் தமிழ் மக்களை கூட்டமைப்பினர் ஏமாற்றுகின்றனர் என முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


நேற்று யாழ். கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால்தான் தீர்வு கிடைக்கும் என்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்தது போல் ஆட்சியும் மாறியது. ஆனால் அண்மையில் வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது என மாவை சேனாதிராசா

(19) ஆம் பக்கம் பார்க்க

## மடுவில் ஆடித்திருவிழாவின் போது...



### ஒருநாள் சேவைக்கு ஆயிரம் ரூபா

(கொழும்பு)

தேசிய ஆள் அடையாள அட்டை பெற்றுக்கொள்ளும் ஒரு நாள் சேவைக்கு அறவிடப்பட்டு வந்த தொகை இன்று முதல் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை இதற்கான கட்டணமாக 500 ரூபா அறவிடப்பட்டு வந்ததாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் துணை ஆணையாளர் ரொஷான் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

# மூவருக்கு மரணதண்டனை

யாழ். மேல்நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சாய் மற்றும் மந்துவில் பகுதிகளில் இடம்பெற்ற இரு வேறு கொலைச் சம்பவங்களில் ஈடுபட்ட மூவருக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

மகனுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக வீடு புகுந்து தந்தையை அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் கடந்த 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி கொடிகாமம் கச்சாய் பகுதியில் நடைபெற்றிருந்தது. இச்சம்பவத்தில் செல்லையா பொன்னுராசா என்பவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சிவபாலு கிருஸ்ணகுமார் (வயது - 45), சுந்தரலிங்கம் செந்தில்குமார் (வயது - 30) என்னும் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த கூட்டணி தயார்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்கு புதிய கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தீவிரமாக ஈடுபட்டுள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் உட்பட அவரது தீவிர ஆதரவாளர்களை இணைத்து இந்த புதிய

(19) ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவை மடக்க மைத்திரி வியூகம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வருவதைத் தடுக்கும் நோக்கில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களமிறக்குவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கவனம் திரும்பியுள்ளது.

அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த வாகனம், உத்தியோகபூர்வ இல்லத்தை மீள ஒப்படைத்துள்ளார்.

இறுதியாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேரில சென்று சந்தித்த அவர், கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவர் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதை தான் விரும்பவில்லை என ஜனாதிபதி இதன்போது நேரடியாகவே கூறியிருக்கிறார்.

(19) ஆம் பக்கம் பார்க்க




## தேர்தலில் ஆசனப் பங்கீடு இறுதி முடிவு இன்னும் இல்லை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள நிலையில் வேட்பாளர் நியமனம் மற்றும் ஆசனப் பங்கீடு தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாளைய கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வவுனியா மாவட்டத்தில் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்களுடைய கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ள வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் . கட்சிகளுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக,

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்திருக்கும் நிலையில் இது

(19) ஆம் பக்கம் பார்க்க



## ரணிலுடன் ஹக்கீம் தேர்தல் கூட்டு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாக, கட்சியின் தலைவரான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமையகத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னரே, அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.


விரைவில் ஐ.தே.க.வுடன் தமது கட்சி புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திடும் என்றும் அவர் கூறியுள்ளார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏ[illegible] தனித்துப்

(19) ஆம் பக்கம் பார்க்க

உயர்தரப் பரீட்சை

புதிய நேர அட்டவணை

இணையத்தில் www.doennets.lk



வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்ததேர்த்திருவிழா அண்மையில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது. ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயப் பிரதம குருக்கள் கீரத்தி ஸ்ரீ வாசன் குருக்களால அபிஷேகங்கள் இடம்பெற்று வசந்தமண்டபபு'சைகள் இடம் பெற்று வேகாவனப் பெருமான் பு'லோகநாயகியும் விநாயகப்பெருமானும் முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையும் எழுந்தருளிவந்து மூன்றுதேர்ச்சக்கரத்தில் அடியார்களுக்கு அருள்பாலித்தவண்ணம் எம் பெருமான் வெளிவீதிவலம் வந்துஆலயத்தைவந்தடைந்ததும் பச்சைசாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. அடியார்களினால் தூக்குக்காவடி பறவைக்காவடி, பாற் செம்பு அங்கப் பிரதட்சணை போன்ற நேர்த்திக் கடன்களிலும் அடியார்கள் ஈடுபட்டனர். இதில் ஏராளமான அடியார்கள் கலந்துசிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (40)

# மடு அன்னையின் ஆடித்திருவிழா நிறைவு



(மடு)

மடு அன்னையின் திருச்சொரூப ஆசீருடன் மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா நேற்று நிறைவடைந்துள்ளது.

மடு திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா கடந்த யூன் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த இத்திருவிழா குறித்த தினத்திலிருந்து மாலை திருச்செபமாலையும், அதனைத் தொடந்து நவநாள் திருப்பலிகளும் இடம்பெற்று நேற்று மாலை விசேட நற்கருணை ஆராதனைகள் இடம்பெற்றிருந்தன.

அதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 6.15 மணிக்கு மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. யாழ் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் சிலாபம் மற்றும் அனுராதபுரம் ஆயர்களான அதி வணக்கத்துக்குரிய வலன்ஸ் மெண்டிஸ், நோபட் அன்ராடி ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இறுதியில் மடு அன்னையின் பவனி இடம்பெற்று திருச்சொரூப ஆசீருடன் மடுத்திருத்தலத்தின் வருடாந்த ஆடித்திருவிழா நிறைவடைந்தது. (25)

# அரங்கியலுக்கான பகிர்வுக்களம்

(யாழ்ப்பாணம்)

தேடல் நாடகமும் அரங்கியலுக்குமான பகிர்வுக்களத்தின் மூன்றாவது நிகழ்வு நாளை மறுதினம் பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தே. தேவானந்த் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பெண்ணியம் பற்றிய படிமங்கள் வாழ்விலும் அரங்கிலும் எனும் தலைப்பில் யாழ். பிரதேச செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் பு. ரஜனி உரையாற்றவுள்ளார்.

இதில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அவர்களின் வாழ்வும் அரங்கில் அவர்களுடைய பங்களிப்பும் பற்றி விரிவாக கலந்துரையாடப்படவுள்ளது.

செயல் திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படும் இந்நிகழ்வில் நாடக அரங்கியல் துறை சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்கு பற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# போதைக்கு எதிரான துவிச்சக்கரவண்டி பேரணி

## வலி.கிழக்கில் இன்று

(புத்தூர்)

புத்தூர், சிறுப்பிட்டி சனசமூக நிலையங்களின் ஏற்பாட்டில் புகைத்தல், மது, போதைப் பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு துவிச்சக்கரவண்டிப் பேரணி இன்று இடம்பெறவுள்ளது.

புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபை அலுவலகத்திற்கு முன்பாக முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகும் இத்துவிச்சக்கர வண்டிப் பேரணி நீர்வேலிச் சந்தி ஊடாக மாசிவன் சந்தி சென்று அங்கிருந்து இராச வீதி வழியாக நிலாவரை சென்று அங்கிருந்து அச்சுவேலி சென்று ஆவரங்கால் வழியாக மீண்டும் புத்தூர் வலி. கிழக்கு பிரதேச சபையை வந்தடையவுள்ளது.

இந்த புகைத்தல், மது, போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணியில் சமூக ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ)

# தாச்சிப் போட்டி

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 19 ஆவது மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத் தலைவர் செ.சண்முகலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ள தோடு இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ. சரவணபவன் மற்றும் சிவ ஞானம் சிறிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் புதுமடம் வைகறை அணியும் மோதவுள்ளன.

# சமூகவெளி நூல் வெளியீடு

மு. அநாதரட்சகனின் (இராசநாயகம்) சமூகவெளி நூல் வெளியீட்டு விழா நாளை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் (ஸ்ரான்லிக் கல்லூரி) இடம்பெறும் இந நிகழ்வானது எழுத்தாளர் சாகித்யரத்னா தெணியானின் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புகையிரதக்கடவை ஊழியர்களின் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபரினால் தெரிவு செய்யப்பட்டு கடமையில் அமர்த்தப்பட்டுள்ள புகையிரதக் கடவை பாதுகாப்பு ஊழியர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது. இவ் ஒன்றுகூடல் நிகழ்வானது புங்கன்குளம் புகையிரத நிலையத்தில் இன்று காலை 9.00 மணியளவில் இடம் பெறவுள்ளது.


பாதுகாப்புக் கடவையில் கடமையில் இருக்கும் ஊழியர் தவிர்ந்த ஏனைய ஊழியர்களைத் தவறாது இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (25)


## சிறு விளம்பரம்

### புதிய வீடு விற்பனைக்கு/ வாடகைக்கு

சுதுமலை தெற்கில் புதிய வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: ஏகாம்பரநாதன் (கடை), சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை, தெற்கு. (R/275)


# புலமைப் பரிசில் செயலமர்வு





(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தரம் ஐந்து மாணவர்களுக்கான பரீட்சை முன்னாயத்த செயலமர்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

இவ்வருடம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வுகளை கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழு ஆசிரியர் அன்பழகனின் உறுதுணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விக் கோட்டரீதியாக நடாத்தி வருகின்றது.

இந்நிலையில் தென்மராட்சி மாணவர்களின் கல்வி மேம்பாட்டினைக் கருத்தில் கொண்டு அந்த வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கும் இவ்வாறான செயலமர்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்ற அப்பகுதி கல்வியியலாளர்களின் கோரிக்கைக்கமைவாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் அனுசரணையுடன் அன்பழகன் ஆசிரியரால் கிளிநொச்சி கல்விவலயத்தின் ஏற்பாட்டில் இச்செயலமர்வு நேற்று நடாத்தப்பட்டது.

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இச் செயலமர்வில் தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட சுமார் 54 பாடசாலைகளைச் சேர்ந்த 523 மாணவர்கள் பங்கு கொண்டனர். இம் மாணவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல் கைநூல்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக்குழுவின் ஏற்பாட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் நிதி ஒதுக்கீட்டில் தரம் ஐந்து மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சைகள் கடந்த மூன்று வருடங்களாக கிளிநொச்சி மற்றும் தென்மராட்சியிலும் நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக அன்பழகன் ஆசிரியரின் பரீட்சை முன்னாயத்த செயலமர்வுகளும் பிரதேசங்கள் ரீதியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்செயலமர்வில் போது கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவர் பத்மநாதன் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

# நூதனமான முறைகளில் போதைப் பொருள் வியாபாரம்

## பாடசாலை மாணவனால் அம்பலம்

(யாழ்ப்பாணம்)

யாழில் போதைப் பொருள் வியாபாரத்தில், பிறமத வியாபாரிகள் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக போதை கலந்த பாக்கைப் பயன்படுத்தி ஆசிரியர்களிடம் அகப்பட்டுக் கொண்ட பாடசாலை மாணவர்களை விசாரித்ததன் மூலம் தெரியவந்துள்ளது. இத்தகவல் சுன்னாகம் பிரதேச பாடசாலை மாணவன் மூலம் தெரியவந்துள்ளது.

யாழில் பெருந்தொகையான பிறமதப் போதைப்பொருள் வியாபாரிகள் களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த போதைப் பொருள் வியாபாரிகளிற்கு பக்கபலமாக பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


அண்மையில் இணுவில் பகுதியிலுள்ள ஆசிரியர் ஒருவர் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் வழங்கியிருந்த வாக்குமூலம், பிறமதத்தவர்கள் யாழில் எவ்வாறு நன்கு திட்டமிட்டு, போதைப் பொருள் வியாபாரத்தில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்பதற்கு தக்க சான்றாகவுள்ளது.

குறித்த ஆசிரியர் கிளிநொச்சிப்பகுதியில் கல்வி கற்பித்து வந்தவேளை அவருடன் வலிய வந்து நண்பர் போல் பழகிய பிறமத போதைப்பொருள் வியாபாரி ஒருவர் ஆசிரியரிடமிருந்து அதிக வட்டிக்குப் பணம் பெற்றுள்ளர். பல மாதங்களின் பின் ஆசிரியர் பணத்தைக் கேட்ட போது வியாபாரி ஏமாற்றிவந்துள்ளார். பின் குறித்த தவணையில் பணத்தைத் தருவதாகக் கூறி தான் தரும் பொதி ஒன்றை யாழில் கொடுக்கும் படியும் கூறியுள்ளார். பார்சலைப் பெற்று யாழ்நோக்கி வந்தவேளை பொலிஸாரினால் இந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டிருந்தார்.

நயவஞ்சத்தனமாக ஆசிரியர் கையில் போதைப்பொருள் பொதியைக் கொடுத்து விட்டு அச்செய்தியைப் பொலிஸாருக்கு வழங்கிய பிறமத போதைப் பொருள் வியாபாரியின் செயலைக் காலம் கடந்தே ஆசிரியரினால் புரிந்துகொள்ள முடிந்துள்ளது. இதுமட்டுமின்றி பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தியே போதைப்பொருள் பொதியைக் கடத்தி வருவதாகவும் ஆசிரியர்களின் விசாரணைகள் மூலம் அறியவந்துள்ளது.

எனவே பிறமதத்தவர்களுடனும், முன்பின் தெரியாதவர்களுடனும் தங்கள் பிள்ளைகள் தொடர்புகளை ஏற்படுத்திவராது பெற்றோர் கவனிக்க வேண்டும் என ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (06)

# சனசமூக நிலையங்களுக்கு 10 ஆயிரம் ரூபா நன்கொடை



(உடுவில்)

வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டது. வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நன்கொடை வழங்கும் நிகழ்வு பிரதேச சபை மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பிரதேச சபையின் தவிசாளர் தியாகராசா பிரபாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 48 சனசமூக நிலையங்களுக்கு இந்நிதி வழங்கப்பட்டது.

பிரதேச சபையின் 2015ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு சனசமூக நிலையங்கள் தங்கள் சிறிய அளவிலான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (48)

# "ஆரொடுநோகேன்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் மூத்த நாடகவியலாளர் குழந்தை மா.சண்முகலிங்கத்தின் "ஆரொடுநோகேன்" நாடக எழுத்துரு நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் தம்பர் மண்டபத்தில் செ.செல்வக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நூல் வெளியீட்டு நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜா, சிறப்பு விருந்தினராக யாழ்.மத்தியகல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நூல் வெளியீட்டுரையினை யாழ்.திருக்குடும்பகன்னியர் மட பாடசாலை நாடகத்துறை ஆசிரியர் யோ.யோன்சன் ராஜ்குமார், நயப்புரையினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க.திலகநாதன். நூலாசிரியர் உரையினை குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளார்கள்.

நூலின் முதற்பிரதியினை சமூக செயற்பாட்டுமையத்தின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் பெற்றுக்கொள்வார். (63)

# "அகவிழி" நூல் வெளியீடும் டெய்சி முறை ஒலிநாடா வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அகவிழி நூல் வெளியீடும் டெய்சி (DAISY) முறையில் வடிவமைக்கப்பட்ட ஒலிநாடா வெளியீட்டு விழாவும் நாளை பி.ப 3 மணிக்கு வாழ்வக மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற உள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தரம் டிவகலால் கலந்து கொள்வார். டெய்சி முறையிலான ஒலிநாடா என்பது விழிப்புலனற்றோருக்கு இலகுவாக புத்தகங்களை ஒலிப்பதிவு செய்து கேட்கக் கூடிய ஒரு தொழில் முறையாகும். டெய்சி முறையில் ஒலிப்பதிவு செய்வது பற்றிய விளக்க நூலும் அன்று வழங்கப்படவுள்ளது. விழிப்புலனற்றோரின் கல்விக்கு உதவ விருமபுவோர், கணனி அறிவுள்ளவர்கள், ஒலிப்பதிவு செய்யக்கூடிய ஆற்றல் உள்ளோர் இதில் பங்குபற்றி அவர்களுக்கு உதவ வேண்டும் என்பது அனைவரது நோக்கமும் ஆகும்.

தற்போது உள்ள அனைத்து வகையான நூல்களும் இம்முறையில் தயாரித்து வழங்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறான விடயங்களில் ஈடுபாடு உள்ளோரை நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (48)

# வீரபத்திர சுவாமியின் வருடாந்த உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர் - கச்சாய் வீதி கோயிற்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஞான வீரபத்திர சுவாமி திருக்கோவில் வருடாந்த உற்சவப் பெருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் இடம்பெறவுள்ளன.

விழா ஆரம்ப நாளில் 108 சங்காபிஷேகம் இடம்பெறுவதுடன் தினமும் மு.ப. 10 மணி முதல் 12.30 மணி வரையும் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையும் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளதுடன் தினசரி பகல் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. 10 ஆம் நாளான 16 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 108 சங்காபி ஷேகம் இடம்பெற்று இரவு சுவாமி வெளிவீதியுலா வருதலும் இடம்பெறுவதுடன் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு வைரவர் சாந்தியுடன் விழா நிறைவு பெறவுள்ளது.

இந்த உற்சவ பெருவிழா ஆலய பிரதம குரு கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.(இ)

# கண்ணிவெடி பாதுகாப்பிற்கான வேலிகளை அகற்றும் விஷமிகள்


(முகமாலை)

முகமாலைப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதி தவிர்ந்த கண்ணிவெடியுள்ள பாதுகாப்பற்ற பகுதிகளை அடையாளப் படுத்தும் வகையில் தூண்கள் நாட்டப்பட்டு முள் கம்புகளினால் வேலிகள் இடப்பட்டிருந்தன.

இவ்வாறு அமைக்கப்பட்ட வேலிகளின் முட்கம்பிகள் மற்றும் தூண்களை விஷமிகள் அகற்றி வருவதால் மக்கள் கண்ணிவெடியுள்ள பகுதிகளை இன்ங்காண்பதில் பெரும் அசௌகரியத்தை எதிர்கொண்டு அசாதாரண சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். (37)





கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் மற்றும் நகுலன் சஞ்சிகை நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வித்தியாலய அதிபர் ரீ.தயானந்தன் தலைமையில் வித்தியாலய வளாகத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மாணவர்கள் பரிசு பெறுவதையும், பிரதம விருந்தினர் வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவர் சோ.சுகிர்தன் உரை நிகழ்த்துவதையும் காணலாம்.

ஒருபோதும் துன்பமாக மாறாத பொருள் ஒன்று உண்டு. அது நாம் செய்யும் நற்செயலே. - மேட்டர்லிங்க்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இங்கு மாற்றம் வேண்டாமா?

"இலங்கை என்ற ஐக்கிய நாட்டுக்குள் தமிழர்கள் தங்களை தாங்களே ஆளக் கூடிய சுயாட்சி அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒன்றுபட்ட சுயாட்சியின் மூலம் அதிகாரங்கள் பகிரப்பட்டு அதற்கு மத்திய அரசு தலையீடு இல்லாமல் முழுமையான பகிரப்பட்ட அதிகாரங்களின் கீழ் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்தை நாங்கள் கோர வேண்டியுள்ளது"

இதன் அடிப்படையிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பு தேர்தல் அறிக்கையை வெளியிடவுள்ளது என யாழ்.மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் புதன் கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார் என்கிறது பத்திரிகைச் செய்தி.

தங்களது அலங்காரமான வாய்ப்பந்தல் கோரிக்கை சாத்தியமாவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா என்பதைச் சொல்லாமலேயே தங்களது பழைய தேர்தல் அறிக்கையின் பகுதியை அப்படியே வரி பிசகாமல் வாசித்து ஏமாற்றியிருக்கிறார் மாவை.

"தமிழர்கள் தங்களைத் தாங்களே ஆளக்கூடிய.... மத்திய அரசு தலையீடு இல்லாமல் முழுமையான அதிகாரங்களின் கழ்.... வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சுயாட்சி...." என்பது கிட்டத்தட்ட தனிநாடு என்பதைத்தான் குறிக்கிறது.

இதை மைத்திரி தருவாரா, ரணில் தருவாரா, அமெரிக்கா தருமா, இந்தியா தருமா, தமிழ்ப் புத்தாண்டுக்குத் தனியாக வாழ்த்துச் சொல்லிய இங்கிலாந்துப் பிரதமர் கமரூன் தருவாரா.... சரி, அந்தத் தீர்வை எடுப்பதற்கு என்ன வழிதான் இருக்கிறது என்பது தெரியாத ஒரு வாக்குறுதிக்குத் தான் தமிழ் மக்கள் திரும்பவும் வாக்களிக்க வேண்டுமா?

"சர்வதேசத்தின் ஆதரவை மேலும் வலுப்படுத்தி புலம் பெயர்ந்த தமிழர்களின் ஒன்றுபட்ட ஆதரவை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் எமது தேர்தல் அறிக்கை வரும். எமது மக்கள் கடந்த காலங்களில் கூட்டமைப்பின் மீது வைத்துள்ள நம்பிக்கை போல, ஆட்சி மாற்றம் ஏற்படுத்த வாக்களித்ததைப் போன்று ஒன்றுபட்டு எமக்கு வாக்களிப்பார்கள் என்று நம்புகின்றோம்..." எனவும் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்பின் தேர்தல் வியூகம் தெளிவானது. வாக்குகளுக்காக புலம்பெயர் தமிழரைத் திருப்திப்படுத்த தனிநாட்டு நிகழ்ச்சி நிரலின்படியான தேர்தல் வாக்குறுதி, வென்றபிறகு தீர்வுக் கதையைக் கைவிட்டு விட்டு அரச எதிர்ப்பில் காலங் கடத்துதல், பிறகு அடுத்த தேர்தல்....

இம்முறையும் இதுதான் நடக்க இருக்கிறது. கூட்டமைப்பால் ஆகக்கூடியது என்றைக்குமே இவ்வளவுதான்! நிதி ஆதாரத்துக்குத் தாங்கள் தங்கியிருக்கும் புலம்பெயர் தீவிரவாத சக்திகளைப் பகைத்துக்கொண்டு இங்கு சாத்தியமாகக் கூடிய தீர்வொன்றைப் பற்றி இவர்களால் பேசிவிட முடியாது.

அதுதவிரவும், தேர்தல் முடிந்தவுடன் ஒற்றுமைக் கொடியைக் கிழித்தெறிந்துவிட்டு ஆளுக்காள் துவந்த யுத்தத்தில் இறங்கப்போகும் கூட்டமைப்புப் பிரகிருதிகள் அவர்களுக்குள் ஒன்றுபட்டதாக ஒரு தீர்வைச் சொல்லிப் பேச வாய்ப்பு மில்லை.

எனவே, "அரசு தீர்வைத் தரத் தயாரில்லை; சர்வதேசமும் விளங்கிக் கொள்வதாயில்லை" என்ற பழைய அதே பஜனையைத்தான் தேர்தல் முடிந்து பிறகு அடுத்த தேர்தல் வரும் வரைக்கும் தமிழ் மக்கள் கேட்க வேண்டியிருக்கும்.

- ஆசிரியர்

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் பிரதமர் வேட்பாளராக சமல் ராஜபக்ஷ

## சரத் அமுனுகம தகவல்

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின சார்பில் பிரதமர் வேட்பாளராக களமிறக்குவதற்கு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் சபாநாயகரை நாடாளுமன்ற தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட வைப்பதன் மூலம், வெற்றியை பெற்றுக்கொள்ளலாமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் யோசனை முன்வைத்துள்ளன.

இந்நிலையில், இந்த யோசனை தொடர்பில் வேட்பாளர் தெரிவுக் குழு ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது, அதனையடுத்து கட்சியின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரியும் கட்சியின் மத்திய குழுவும் இணைந்து இறுதித் தீர்மானம் எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிக்கும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கும் இடையில், விஷேட சந்திப்பொன்றும் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

# மகிந்தவுக்கு சந்தர்ப்பம் வழங்கினால் மைத்திரிக்கு எதிராக கடும் முடிவுகள்

## கப்பல்துறை அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏதாவது ஒரு காரணத்திற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனத்தை வழங்கினால், சிறிசேன ஜனாதிபதியாவதற்கு ஆதரவளித்த கட்சிகள் அவரிற்கு எதிராக கடுமையான அரசியல் முடிவுகளை எடுக்கவேண்டி வரலாம் என துறைமுக கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மக்களால் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர், ஏனைய ஜனாதிபதிகள் போல அவர் அதிகாரத்திலிருந்து ஓய்வு பெறவில்லை.

பயங்கரவாதத்தை முடிவிற்கு கொண்டுவந்தமைக்காக நாங்கள் ராஜபக்ஷவை மதிப்பது உண்மை, எனினும் மக்கள் சர்வாதிகாரப் போக்குடைய ராஜபக்ஷவை தோற்கடித்தனர், இதன் மூலம் ஏதேச்சாதிகாரப் போக்கிற்கு முடிவு கட்டினர்,

நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தவே மக்கள் சிறினேவிற்கு வாக்க்ளித்தனர். ராஜபக்ஷவை மீண்டும் கொண்டுவருவதன் மூலம் நாட்டில் சர்வாதிகாரம், ஊழல் போன்றவை மீண்டும் தலைதூக்குவதற்கு சிறிசேன வழிவகுக்கவேண்டும் என யாரும் விரும்பவில்லை.

முன்னைய அரசாங்கத்தின் கீழ் புரிந்த ஊழல்கள் போன்ற நடவடிக்கைகளிற்காக சிறிசேன அரசாங்கத்தினால் விசாரணைகளை எதிர்கொள்ளும் தனது சகாக்களை பாதுகாக்கவே ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் நுழைய விரும்புகின்றார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊவா மாகாண முன்னாள் முதல்வர் மொனராகல மாவட்டத்தில் போட்டி

(கொழும்பு)

ஊவா மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மொனராகல மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்து அவர் மேலும் கருத்து தெரி விக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான தரப்பினர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க முயற்சித்து வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் எந்தக் கட்சியில் எந்த மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவது என்பதனை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பார்.

மெதமுலனவில் நடைபெற்ற கூட்டத்தில் மகிந்தவிற்கு ஆதரவளிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சொற்பளவானவர்களே பங்கேற்றிருந்தனர்.

இந்த கூட்டத்தில் பங்கேற்காதவர்கள் மகிந்தவிற்கு ஆதரவளிக்கவில்லை என அர்த்தப்படாது. மகிந்த ராஜபக்ஷவிற்கு சுமார் 85 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அரச மருந்துக் கலவையாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம்

(கொழும்பு)

அரச மருந்துக் கலவையாளர்கள் சங்கத்தினால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டுள்ள பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக நாடளாவிய ரீதியில் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைககும் வரை பணி பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என அரச மருந்துக் கலவையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் உதேணிகளுதந்திரி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின செயலாளர் டி.எம்.டி.திசாநாயக்க தெரிவிக்கையில்,

அரச மருந்துக் கலவையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன அவர்களுக்கான சம்பள உயர்வு மற்றும் மேலதிக கொடுப்பனவு குறித்தும் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வெகு விரைவில் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும் நோயாளர்களின் நிலையை கருத்திற் கொண்டு அரச மருந்துக் கலவையாளர்கள், தமது கடமைகளில் ஈடுபடுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# 30 மில்லியனுக்கு குறைவான வருமானம் பெறும் 117 உள்ளூராட்சி சபைகள் துரித அபிவிருத்தி

வருடாந்தம் 30 மில்லியன் ரூபாய்க்கு குறைவான வருமானத்தை பெறும் 117 உள்ளூராட்சி சபைகள் இவ்வருடம் துரித அபிவிருத்திக்குள் உள்ளடக்கப் படவுள்ளது.

அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி அமைச்சு செயலாளர் இவ்வாறு அறிவித்துள்ளார்.

மாதாந்தம் 10 இலட்சம் (ஒரு மில்லியன் ரூபா) வீதம் யூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரைக்குமான 6 மில்லியன் ரூபா வீதம் ஒவ்வொரு பின் தங்கிய உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்படும்.

பொதுமலசல கூட பராமரிப்பு, வடிகால் கட்டமைப்பு பராமரிப்பு நடவடிக்கை, குப்பை முகாமைத்துவம், வாராந்த சந்தை, இயந்திர உபகரண பராமரிப்பு, குடிநீர் விநியோகம், வாகன தரிப்பிடம், பிண எரிப்பகம், ஆயுள்வேத வைத்திய நிலையம் உட்பட 15 இற்கும் மேற்பட்ட தலைப்புக்களில் திட்டங்கள் முன்வைத்து சபைகளின் வளர்ச்சியை முன்னெடுக்கலாம் என செயலாளர் அறிவித்துள்ளார். (92)

# ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்: ஒரு கடவுளைவிட சற்று குறைவான கதாநாயகர்கள்

**ஜயசேனவினதும் மற்றும் ராஜகுலேந்திரனதும் தியாகம் எழுச்சி எதனையும் செய்யாது வெறுமே தெளிவற்று மூழ்கிவிட்டது. அவர்களுக்காக நினைவுச் சின்னம் எதுவும் நிறுத்தப்படவில்லை, எந்த வீதிக்கும் அவர்களின் பெயர் சூட்டப்படவில்லை, அவர்கள் உயிரிழந்த இடங்களில் அடையாளச் சின்னங்கள் எதுவும் நிறுத்தப்படவில்லை. ஆனால் பிறகு அது ஏன் அப்படியானது? பெருந்தன்மையான அத்தகைய செயல்கள் ஏன் கவனிக்கப்படாமலே போயிற்று?**

## சானா விக்கிரமசேகரா கட்டுரையிலிருந்து

யுத்தங்கள் மிகக் கொடுமையானவை. அவை மக்களை கொன்று, அவர்களது உடமைகளையும் மற்றும் வாழ்வாதாரங்களையும் அழித்து நாசமாக்கி விடுகின்றன. அவை மனிதர்களின் ஆன்மாக்களையும் சீரழித்து விடுகின்றன. அநேகமாக உயர்ந்த இலட்சியங்களின் பெயரில், பெரும்பாலும் ஆண்களால் - இன்றைய நாட்களில் பெண்களாலும்கூட - பாதுகாப்பு அற்றவர்களுக்கு எதிராக மிகக் கொடுமையான அட்டூழியங்கள் புரியப்படுகின்றன, இந்த ஆண்களும் மற்றும் பெண்களும் சீருடை ஒன்றை அணிவதற்கு முன்னர் அல்லது இந்த விடயத்தை மேற்கொள்ளுவதற்கு முன்னர் தங்கள் சக மானிடர்களிடத்திலோ அல்லது விலங்குகளிடத்தில் கூடவோ வேண்டுமென்றே செய்யப்படும் இத்தகைய கொடிய செயல்களை வெகு அரிதாகவே புரிந்திருப்பார்கள்.

போரானது ஆயுதம் ஏந்தாதவர்களையும் கொடும்பாதக அரக்கர்களாக மாற்றிவிடுகிறது. அவர்கள் எதிரியின் மரணத்தையும் மற்றும் அழிவினையும் கண்டு மகிழ்ச்சியடைந்து மற்றும் இறந்த உடல்களை கணக்கிட்டுப்பார்த்து அவல மகிழ்வு கொண்டு ஆயுதம் ஏந்திய தங்கள் கதாநாயகர்களை மேலும் கொலை செய்யத் தூண்டுவார்கள்.


இலங்கையில் நடைபெற்ற போரும் அத்தகைய கொடுமையான மற்றும் வீரமான ஏராளமான உதாரணங்களை வழங்கியுள்ளது. நாதியற்றவர்களின் அதிர்ச்சியூட்டும் படுகொலைகள் அசத்தலான வீரத்தோடு ஒப்பிடப்பட்டது. ஒரு டசினுக்கும் மேற்பட்ட இலங்கை வீரர்கள், வீரச் செயல்களைப் புரிந்ததுக்காக இராணுவத்தில் வழங்கப்படும் அதி உயர் இராணுவ மரியாதைக்குரிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

புலிகளிடமும், எண்ணற்ற, பெயர் தெரியாத இளம் ஆண்களும் மற்றும் பெண்களும் பெருகிப் பாய்ந்து வரும் எதிரியின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் மற்றும் போர்க்களத்தில் அவர்களை வழிநடத்திய தலைவர்களுக்கும் முன்னால் தங்களையே பலி கொடுத்த வீரர்கள் உள்ளனர்.

ஆனால் ஆயுதம் ஏந்தாதவர்களைக் காட்டிலும் ஆயுதம் ஏந்தியவர்களுக்கு தைரியம் எளிதில் வந்துவிடுகிறது. தன்னிடம் எந்த ஆயுதமும் இல்லாமல், ஆனால் தான் உயிர் பிழைப்பதற்காக எதிரியின் கருணையை நாடி நிற்கும் ஒரு மனிதனைக் காட்டிலும் ஒரு துப்பாக்கி, ஒரு கையெறிகுண்டு, அல்லது ஒரு கத்தியாவது கிடைத்தால் போராடும் மனிதன் அதிக பாதுகாப்பை, உணர்வதோடு ஆபத்துக்கு முகம் கொடுக்கத் தயாராக இருப்பான்.

எனினும் மற்றொரு விசேடவகையான தைரியமும் உள்ளது. இந்த வகையான தைரியம் சாவுக்கும் வாழ்வுக்கும் மத்தியில் தனியான ஒரு வேறுபாட்டைக் காட்டுகிறது, இந்த விதமான தைரியம் செய்து காண்பிக்க மட்டுமே முடியும். ஏனெனில் நீங்கள் மரணத்தைக் காட்டிலும் மற்றொரு எதிரிக்குத்தான் மோசமாக பயப்படுவீர்கள், அது உங்கள் மனச்சாட்சி. அநேகமாக சாதாரண மக்கள் மத்தியில்தான் இது காணப்படுகிறது, அவர்கள் தங்கள் மனச்சாட்சியை காப்பதற்காக எதையும் இழக்கத் தயாராக நிற்கிறார்கள்.

இலங்கையில் நடைபெற்ற போரானது இத்தகைய தைரியத்தை அதன் பெரும் பங்காகக் கொண்டுள்ளது. அதன் பெருந்தன்மை கண்டு உணர்ச்சிவசப்பட்டு, அதன் எளிமையை கண்டு ஆச்சரியப்பட்டது மட்டுமன்றி நான் மற்றொன்றையும் இங்கு சேர்க்கவேண்டும், வெட்கமின்றி நாட்டை விட்டு துரத்தியடிக்கவும் இந்தப் போர் உதவியது. மக்களை கலங்க வைத்து, ஆனால் ஊடகங்களில் வெறும் குறிப்பாக மட்டும் கடந்து சென்ற அப்படியான இர்ண்டு நிகழ்வுகளை இங்கு விபரிக்க விரும்புகிறேன்.



முதலாவது சம்பவம் 1984ஆம் ஆண்டு மன்னாரில் நடந்த ஒரு இராணுவ வன்முறையின்போது நடந்தது. அது அரசாங்கப் படைகளுக்கு எதிராக தமிழ் போராளிகளின் தாக்குதல் உச்சக் கட்டத்தில் இருந்த நேரம் மன்னார் - மதவாச்சி வீதியில் உள்ள ஜூபிலி சந்திக்கு அருகில் இடம் பெற்ற ஒரு கண்ணிவெடித் தாக்குதல், ஒரு படைவீரரின் உயிரைப் பறித்ததுடன் மற்றும் ஆறுபேருக்கு காயத்தையும் விளைவித்தது. அந்த நேரத்தில் இருந்த வழக்கமான செயற்பாட்டினைப்போல சித்தங்கலங்கிய நிலையில் இராணுவத்தினர் வீடுகளில் இருந்தவர்களையும் மற்றும் வாகனங்களில் வந்தவர்களையும் துப்பாக்கியால் சுட்டு வன்முறைகளில் ஈடுபட்டனர்.

பிரதானமாக தமிழ் பிரயாணிகள் நிறைந்த இ.போ.ச பேருந்து ஒன்று அவர்களிடம் சிக்கிக் கொண்டது. பழிவாங்கும் வெறி இன்னமும் தணியாத வீரர்கள், தங்களுக்கு சுட்டுத்தள்ள வசதியாக இருப்பதற்காக பயணிகள் அனைவரையும் கீழே இறங்கும்படி கட்டளையிட்டார்கள். பேருந்தின் நடத்துநராக இருந்த குடா தேவகே ஜயசேன என்கிற சிங்களவர், பேருந்தில் உள்ள பயணிகளின் உயிர்களுக்கு தான்தான் பொறுப்பு எனக்கூறி அதனை ஆட்சேபித்தார். அவர்களை படுகொலை செய்ய அவர் அனுமதிக்கவில்லை.

ஆனால் அத்தகைய காரணங்களை கேட்கும் மனநிலையில் படை வீரர்கள் இருக்கவில்லை. அவர்கள் தமிழ் பிரயாணிகளையும் மற்றும் முஸ்லிம் சாரதியையும் சுடுவதற்கு முதலில் அந்த நடத்துநரை சுட்டுக் கொன்றார்கள். அன்றைய தினம் கிட்டத்தட்ட 90 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது, அதில் கண்ணிவெடியில் உயிரிழந்த இராணுவ வீரரும் மற்றும் தமிழ் பயணிகளுக்காக எதிர்த்து நின்ற பேருந்து சாரதியும் மட்டுமே உயிர்நீத்த இரண்டு சிங்களவர்கள்.

இரண்டாவது சம்பவம் முன்னயதைவிட குறைவாக வருத்தப்படக் கூடியதல்ல, முன்னயதுக்கு பல வருடங்கள் கழித்து இரண்டாவது ஈழப்போரின் உச்சத்தில் இடம்பெற்றது. அக்கரைப்பற்றுக்கும் பொத்துவிலுக்கும் இடையே உள்ள பொதுப் போக்குவரத்துகளை, இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையே முஸ்லிம்கள் பயணம் செய்வதை தடுப்பதற்காக புலிகள் அடிக்கடி தாக்கி வந்தார்கள். 1992இல் அவர்கள் ஒரு இ.போ.ச பேருந்தினை தாக்கி 12 முஸ்லிம்கள், ஒரு சிங்களவர் ஒரு தமிழர் என 14 பேரைக் கொன்றார்கள். ராஜகுலேந்திரன் எனும் பெயரை உடைய அந்த ஒரேயொரு தமிழ் பயணியை கொல்வதை தவிர்ப்பதற்காக கீழே இறங்கும்படி கட்டளையிடப்பட்டது. ஆனால் தைரியமான அந்த மனிதன் அதற்கு மறுத்து ஏனைய பயணிகளுடன் இருப்பதையே தெரிவு செய்தார். புலிகள் உடனே அந்த மனிதரை வெளியே இழுத்துவந்து ஏனைய பயணிகளை வதம் செய்வதற்கு முன்னர் அவரை சுட்டுக் கொன்றார்கள்.

இத்தகைய வீரம், இத்தகைய துணிவு என்பன எங்களை சிறியவர்களாகவும் மற்றும் முக்கியமற்றவர்களாகவும் எண்ணும்படி செய்கிறது. இரண்டு எளிய அநேகமாக வறுமைப்பட்ட மனிதர்கள், தாங்கள் சரியென நினைத்ததுக்காக எதிர்த்து நின்று உயரிய தியாகத்தை புரிந்துள்ளனர், அதேவேளை எங்களில் பலர் பிரமாண்டமான தைரியத்தை காண்பிக்கக் கூடியவர்கள், எங்கள் கைகளில் ஆயுதம் ஏந்துவதற்கு துணிச்சல் இல்லாமல் எங்களால் எதையும் அடைய முடியாத விடயத்தில் தலையிடுவது முட்டாள்தனம், என்கிற பகுத்தறிவின் முன்பாக மனச்சாட்சியை அடிமைப்படுத்தி தோள்களைக் குலுக்கிக் கொண்டு பின்வாங்குகிறோம்.

ஜயசேனவினதும் மற்றும் ராஜகுலேந்திரனதும் தியாகம் எழுச்சி எதனையும் செய்யாது வெறுமே தெளிவற்று மூழ்கிவிட்டது. அவர்களுக்காக நினைவுச் சின்னம் எதுவும் நிறுத்தப்படவில்லை, எந்த வீதிக்கும் அவர்களின் பெயர் சூட்டப்படவில்லை, அவர்கள் உயிரிழந்த இடங்களில் அடையாளச் சின்னங்கள் எதுவும் நிறுத்தப்படவில்லை. ஆனால் பீறகு அது ஏன் அப்படியானது? பெருந்தன்மையான அத்தகைய செயல்கள் ஏன் கவனிக்கப்படாமலே போயிற்று?

பொதுவான மனிதநேயத்தை நம்பியதால் அவர்கள் தங்கள் உயிர்களை இழந்தார்கள்? எதிரிகளின் பதுங்கு குழிகளையோ அல்லது தாங்கிகளைத் தாக்கி அவர்கள் தங்கள் உயிர்களை விட்டிருந்தால் அவர்களின் பெயர்கள் எங்கள் காதுகளில் இடியோசை போல கேட்டிருக்கும். ஆனால் அவர்கள் சிறிய மக்கள் அவர்கள் மனச்சாட்சி தெரிவித்த சிறிய காரணங்களுக்காக அவர்கள் மரணமடைந்தார்கள் அதனால் அவர்களைப்பற்றி யாருக்கும் தெரியாமற்போனது. அவர்கள் இளைஞர்களோ அல்லது வயதானவர்களோ, எங்கே வாழ்ந்தார்களோ அல்லது யாரை விட்டுச் சென்றார்களோ என்று எங்களுக்கு எதுவும் தெரியாது. அவர்கள் எப்படி இருப்பார்கள் என்றுகூட எங்களுக்குத் தெரியாது, அவர்களது பெயர்கள் மட்டும் எங்களிடம் உள்ளன.

ஜயசேனவை பற்றிய கதை மன்னாரில் நடந்த இராணுவ அட்டூழியம் என்கிற கட்டுரையாக "சற்றடே ரிவியு" என்ற பத்திரிகையில் வந்திருந்தது, எனக்குத் தெரிந்து வேறு எதிலும் அது இடம்பெறவில்லை, அதேவேளை ராஜகுலேந்திரனது தியாகம் வீரகேசரி பத்திரிகையின் 7 ஆம் பக்கத்தை தொட்டுச் சென்றது. இந்தக் கட்டுரைகளை வாசித்த அநேகம் பேர்கள் நிச்சயமாகக் கலங்கியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை, ஆனால் கதையின் முக்கியமான பகுதியான படுகொலைகளை நடத்தியவர்களின் மிருகத்தனமான செயல்களை படிப்பதற்கு செல்வதற்கு முன் ஒரு சில வினாடிகள் மட்டுமே.

யுத்தத்தில் வீரச்செயல்களை புரிந்தவர்களை கொண்டாடுவதில் எனக்கு எதிர்ப்பு எதுவுமில்லை, ஆனால் வீரத்தையும் துணிவையும் வெளிப்படுத்திய அந்த சாதாரண இரண்டு ஆன்மாக்களை போன்றவைகளையும் அங்கீகரிக்க வேண்டும், விசேடமாக நல்லிணக்கத்தையும் மற்றும் எங்கள் பொதுவான மனித நேயத்தையும் பற்றி வலியுறுத்தி தொண்டை கிழியக் கத்தும் ஒரு நாட்டுக்கு. ஏழை சிங்கள பஸ் நடத்துநர் தனது தமிழ் பயணிகளின் உயிர்களை பாதுகாப்பதற்காக மரணமடைந்த சுயநலமற்ற தியாகத்தையோ மற்றும் தனது சிங்கள மற்றும் முஸ்லிம் சகோதரர்களை கைவிட மறுத்து உயிர்விட்ட அந்த தமிழரையும் நினைவு கூர்ந்து அங்கீகரிப்பதைக் காட்டிலும், எங்களைக் கட்டிப்போட்டிருக்கும் கொடூரத்தையும் மற்றும் தைரியத்தையும் எங்களுக்கு நினைவுபடுத்துவதற்கு வேறு சிறந்த வழிகளுள்ளனவா?

# நல்லாட்சியா? நஞ்சாட்சியா?

# மக்களே தீர்மானிக்க வேண்டும்

## சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டுக்குத் தேவை நல்லாட்சியா அல்லது நஞ்சாட்சியா என்பதனை மக்கள் தீர்மானிக்க வேண்டுமென அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்த விடயம் குறித்து மக்கள் கூடுதல் கவனம் செலுத்த வேணடியது அவசியமானது

தங்களது சுயலாபங்களை மட்டும் கருத்திற் கொணடு இம்முறை பொதுத் தேர்த லில மக்கள் வாக்களிக்கக் கூடாது

எதிர்கால சந்ததியினரையும் கருத்திற் கொண்டு இம்முறை தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் சாதாரண பொதுமகனை மன்னராகக முயற்சிக்கின்றது நஞ்சாட்சி அரசாங்கம் குடும்பத்தையும் சுற்றத்தையும் போசிக்க முயற்சிக்கின்றது.

புதிய அரசாங்கம் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிமுகம் செய்துளளது அதன் ஊடாக பல்வேறு நன்மைகள கிடைத்துள்ளதாகவும் அவர மேலும தெரிவித்துள்ளார்.

# உயர்தரப் பரீட்சையில் 3,09,069 பரீட்சார்த்திகள்

(கொழும்பு)

நடப்பாண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் 309,069 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியு.எம்.என்.ஜே. புஷ்ப குமார தெரிவித்துள்ளார்.

பாடசாலையினூடாக 236,072 பேரும், தனிப்பட்ட ரீதியில் 72,997 பேரும் தோற்றவுள்ளனர்.

கடந்த வருடத்தை விடவும் இம்முறை சுமார் 12 000 பரீட்சார்த்திகள் அதிகமாக தோற்றவுள்ளனர் எனவும், பரீட்சைக்காக 2,180 பரீட்சை மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்த போன்ற நாட்டுத் தலைவர் 500 ஆண்டுகள் கடந்தாலும் கிடைக்காது

## குமார வெல்கம புகழாரம்

(கொழும்பு)

இன்னும் 500 ஆண்டுகள் கடந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போன்றதொரு தலைவர் உருவாக மாட்டார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டின் மக்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த மீது அளவு கடந்த நேசம் கொண்டுள்ளனர்.

இவ்வாறு மக்களினால் நேசிக்கப்படும் ஓர் தலைவர் இலங்கையில் மட்டுமன்றி உலகிலேயே இல்லை.

இன்னும் 500 ஆண்டுகள் கடந்தாலும் மகிந்த போன்றதொரு தலைவர் உருவாகமாட்டார். இவர வேறு யாருமல்ல துட்டகைமுனு இளவரசரேயாகும்.

இந்த நாட்டு மக்கள். மகிந்தவை போன்றே என்னையும் நேசிக்கின்றனர்.

மகிந்தவிற்கு அடுத்தபடியாக நாட்டு மக்களினால் நேசிக்கப்படுபவர் இந்த குமார வெல்கமவாகும் என அவர் பதுரலிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

# யானைச் சின்னத்தில் ரிசாத் வன்னியில் போட்டி



(கொழும்பு)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிசாட் பத்தியுதீன் வன்னி தேர்தல் மாவட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் போடடியிடத் தீர்மானித்துள்ளதாகவும், அந்த வேட்பாளர் பட்டியலில் அவர் உட்பட முஸ்லிம்கள் மூவரை பெயரிடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரின் கோரிக்கையினால் வன்னி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் பாரிய நெருக்கடிக்கு உட்பட்டுள்ளதாகவும், வன்னி வேட்பாளர் பட்டியலில் ஐந்து முஸ்லிம்களுக்கு நியமனம் வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரிசாதுக்கு மூவருக்கு சந்தர்ப்பம் வழங்கும் போது, வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாருக்கிற்கும் இருவருக்கு வழங்க வேண்டிய நிலையுள்ளது.

வன்னி வேட்பாளர் பட்டியலில் 9 பேருடைய பெயர்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட முடியும். மீதியுள்ள நால்வரில் சிங்களவர் இருவர், தமிழர் இருவர் பெயரிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மக்கள் தொகையின் அடிப்படையில் சிங்களவர் இருவருக்கு வாய்ப்பளிக்க முடியாது என்ற வாதமும் முன்வைகக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சந்திரிக்கா போட்டியிட்டால் மகிந்தவின் பின்னடைவு நிச்சயம்

## விமல் வீரவன்ச ஆரூடம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது வேறு ஒரு கூட்டணியின் கீழ் முன்னாள ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க போட்டியிட்டால், மகிந்த ராஜபகச தரப்பு குறிபபிடத்தக்களவு பின்னடைவை சந்திப்பது நிச்சயம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க எதிர்வரும பொதுத்தேர்தலில் போட்டியிடப் போவதாக அவரது செயலாளர் பியதாச திஸாநாயக்க நேற்றுமுன்தினம் ஊடக அறிக்கையை வெளியிட்டதைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மத்தியில் அதிர்வு ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் செயலாளர் வெளியிட்ட அறிக்கை, மகிந்த ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிக்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

மெதமுலன இல்லத்தில் மகிந்த ராஜபக்ச நேற்று விசேட அறிவிப்பை வெளியிட்ட பின்னர், ஊடகவியலாளர்கள் அனைவரையும் வெளியேற்றி விட்டு, மகிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மாத்திரம் மூடிய அறைக்குள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா தேர்தலில் போட்டியிட்டால், ஏற்படக்கூடிய பாதிப்பு களமற்றும் அதனை தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன் போது கலந்துரையாடியுள்ளதாக பேசபபடுகிறது என அவர் அறிவித்துள்ளார்.

## மகிந்த ராஜபக்ஷ கூட்டத்தில்

# எதிர்பார்க்கப்பட்டது 100 பேர் கலந்துகொண்டோர் 28 பேர்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மெதமுலனவில் நேற்றுமுன்தினம் நடாத்திய விசேட கூட்டத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த 28 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 100 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பார்கள் என முன்னதாக அறிவிக்கப்பட்டது.

ஏற்பாட்டாளர்கள் 100 உறுப்பினர்கள் பங்கேற்பார்கள் எனத்தெரிவித்து அதற்கான ஏற்பாடுகளைச செய்திருந்தனர். எனினும், நேற்று முன்தினம் மெதமுலனவிற்கு அணமையில் கலைக்கப்பட்ட ஆறாம் நாடாளுமன்றில் அங்கம் வகித்த 28 உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றுள்ளனர்.

சபாநயாகர் சமால் ராஜபக்ச, குமார வெல்கம, மகிந்தானந்த [illegible] ரோஹித அபே குணவர்தன, எஸ்.எம்.சந்திரசேன, ஆர்.துமிந்த சில்வா, மாலினி பொனசேகா, பவித்ரா வன்னியாராச்சி, கமலா ரணதுங்க, டி.பீ.ஏக்கநாயக்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ஹெகலிய ரம்புக்வெல்ல, சந்திரம வீரக்கொடி, விமல் வீரவன்ச, தினேஸ் குணவர்தன, நிசாந்த முத்து ஹெட் டிகம, திஸ்ஸ கரலியத்த, மனுஷ நாணயக்கார, வாசுதேவ நாணயககார, திஸ்ஸ விதாரண, சரண குணவர்தன், காமினி லொககுகே, ஜீ.எல். பீரிஸ், பந்துல குணவர்தன, பிய சிறி விஜேநாயக்க, அருந்திக்க பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# 40 ஆசனங்களைக் கூட மகிந்த தரப்பால் பெறமுடியாது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பிற்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 40 ஆசனங்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாது என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகத்தன்மையையே ஏற்படுத்தும். மகிந்த ராஜபகஷவை பின்தள்ளி வெற்றியீட்ட அரசியல் பொறிமுறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல்"மோசடிகள், எதிர்வரும் தேர்தல் பிரசாரத்தின் போது மகிந்த தரப்பிற்கு பாதகமாகவே அமையும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த பெற்றுக்கொண்ட 58 இலட்ச வாக்குகளை இம்முறை பொதுத் தேர்தலில் பெற்றுக் கொள்ள முடியாது. பொதுத் தேர்தலின் போது 120 ஆசனங்களைப் பெற்றுக் கொள்வது ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தேசமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.பல்கலையில் எசல பண்டிகை

யாழ்.பல்கலைக்கழகத்தில் பெரும்பான்மையின மாணவர்களால் எசல பண்டிகை கொண்டாடப்பட்டது. யாழ்.பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ மற்றும் வணிக பீட மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்றுமுன தினம் மாலை 7 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்நிகழ்வுக்கு வடமாகாண ஆளுநர் எச்.எம்.ஜீ.எஸ்.பள்ளிஹக்கார பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்வினை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தினுள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அலங்கார கூடுகள் கட்டப்பட்டிருந்ததுடன், பௌத்த மதத்தினை பிரதிபலிக்கும் கொடிகளும் கட்டப்பட்டு இருந்தன.

இந்நிலையில், எசல பண்டிகையை முன்னிட்டு நேற்றுமுன்தினம் காலை ஐஸ்கிறீம் மற்றும் கடலை தானம் மாணவர்களால் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 303 பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் அரசின் ஐம்பதாயிரம் ரூபா செலுத்திப் பெறும் உந்துருளிகள் வழங்கி வைக்கப்பட்டது. கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த சேனாரட்ன பொலிஸாருக்கு உத்தியோகபூர்வமாக உந்துருளிகளை வழங்கி வைப்பதனையும் உந்துருளிகளை பெற்றுக்கொண்ட பொலிஸாரையும் காணலாம். (29)

# அரசியலில் ஈடுபட மாட்டேன் தகுதியானவருக்கே இடமளிப்பேன்

## தேசமானிய இராமச்சந்திரன் தெரிவிப்பு

நான் அரசியலில் ஈடுபட மாட்டேன். ஆனால் திறமையும் தகுதியும் உள்ள இந்து பௌத்த கலாசார பேரவையின் அங்கத்தவர் ஒருவரைத் தேர்தலில் ஈடுபட வழிசமைத்துத் தருவேன் என இந்து பௌத்த கலாசாரப் பேர வையின் செயலாளர் தேசமா னிய எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற இந்து பௌத்த கலாசார பேரவையின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பேரவையின் தலைவர் அத்துரலிய ரத்தின தேரர் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் முன்னிலையில் அவர் மேலும் உரையாற்றுகையில், 7000 மாணவர்கள் அல்லது அங்கத்துவர்களாக இருக்கும் ஆசிரியர்களில் தகுதியும், திறமையும் உள்ள ஒருவரை தேர்தலில் ஈடுபட வழியமைத்துத் தருவேன் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசாங்கத்தின் அணியில் போட்டியிடுவதற்கு இந்து பௌத்த கலாசார பேரவையில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்யப் போவதாகவும் தெரிவொன்றை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள அல்லது அங்கத்தவர்களாக இருககும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை முழுமையான சுய விபரக்கோவையுடன் இன்று வரை இந்து பௌத்த கலாசார பேரவையின் தலைவர் வேண்டுகோள விடுத்துள்ளார். (06)

# பட்டமேற்கல்வி டிப்ளோமாவிற்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறைந்தது மூன்று வருட காலத்தைக் கொண்ட இளமானிப்பட்டம் பெற்ற பட்டதாரியாக இருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையின் சேவையிலுள்ள ஆசிரியராக, அதிபராக ஆசிரிய ஆலோசகராக அல்லது ஆசிரிய கல்வியியலாளராக இருத்தல் வேண்டும் அத்துடன் 2014.06.30 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ நியமனம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்திலும், 155 ஆம் மைல்கல், கண்டி வீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள கிளிநொச்சி கற்கை நிலையத்திலும், ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி 4ஆம் வட்டாரம், இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லைத்தீவு கற்கை நிலையத்திலும் இடம்பெறும். விண்ணப்பப் படிவங்களை 28.06.2015 முதல் 23.07.2015 வரை யாழ்.பிராந்திய நிலையத்திலும், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கற்கை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாமென யாழ் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)


மட்டு கிழக்கு சாவகச்சேரி மோகனதாஸ் சனசமூக நிலையத் தின் கடந்த 10.05.2015அன்று பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் பி.ப 4 மணிக்கு சனசமூக நிலையதில் இடம்பெற்றது.

இந் நிர்வாக சபைத் தெரிவில் புதிய நிர்வாக சபையின் காப்பாளர் சபையில் செ.தவராசா, சி.இதயராஜா,கா.மகாதேவன், செ.ஜெயராசா, சு.சுதாகரன் ஆகியோர தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் செயலாளராக வேகிருஸ்ணன் தலைவராக சி.செல்வராசா, உப தலைவராக ஆயசோதரன், உப செயலாளர் த.கஸ்ரோ,பொருளாளர் த.முரளிதரன் கலைக்கழக செயலாளர் அ.இராசலிங்கம் விளையாட்டுக்கழக செயலாளர் த.சிவசண்ணா மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக செ.மா.சுபாகரன், செநளினகாந், பி.தளிர்ராஜ், வீ.தவக்குமார், கி.பிரசாத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(இ

# "வித்தியா கீதங்கள்" இறுவட்டு வெளியீடு



(புங்குடுதீவு)

அன்புச் சகோதரி வித்தியாவின் நினைவுகளைத் தாங்கி கிளியூர் ரமணன், சிவா றதீஸ ஆகியோரின் தயாரிப்பில் உருவான வித்தியா கீதங்கள் என்ற பாடல் இறுவட்டு கடந்த 26ஆம் திகதி வித்தியா கல்வி பயின்ற பாடசாலையான யா புங்குடுதீவு மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

புங்குடுதீவு இளைஞர் கழக தலைவர் சதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் யாக்கிரத சைதன்ய சுவாமிகள், தொன் பொஸ்கோ கிளிநொச்சி பயிற்சி நிலைய நிர்வாக இயக்குநர் பாதிரியார் சேவியர் அடிகளார், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதம அர்ச்சகர் பிரபா ஐயா ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைக்க வித்தியாவின் குடும்பத்தினர் முதற்பிரதியை பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாதிரியார் சேவியர் அடிகளார் உரை நிகழ்த்துகையில் சகோதரி வித்தியாவின் மரணம் கொடுமையிலும் கொடுமை எந்தக் காலத்திலும் எந்த சமூகத்தாலும் மறக்கப்பட முடியாதது. இனிமேலாவது நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் இத்தகைய கொடிய சக்திகளை எமது தேசத்தில் இருந்து வேருடன் அகற்ற வேண்டும்

வித்தியா எமக்குச்சொல்லிச் சென்றிருக்கும் செய்தியும் அது தான்,விழிப்புடன் இருந்து பெண்மையையும், சிறுவர்களையும், எம் தேசத்தையும் காப்போம் என்றார்.

தொடர்ந்து இறுதியில் கிளியூர் ரமணனின் ஏற்பாட்டில் அன்புச சகோதரி வித்தியாவின் நினைவுகளைத் தாங்கி வித்தியாவின் தாயாரின் பொற்கரங்களால் பாடசாலை வளாகத்தில் தென்னை மரக்கன்று ஒன்று நாட்டப்பட்டது.

## முரசின் இன்றைய பலன்

(03.07.2015 வெள்ளிக்கிழமை

மன்மத வருஷம் ஆனி மாதம் 18 ஆம் திகதி.
சித்தம் யோகம் / பிரதமை திதி
உத்தராட நட்சத்திரம் பின் இரவு - 3.18 வரை பின் திருவோணம்
இராகுகாலம் 10.27 - 11.57 வரை சுப நேரம் 5.57 - 7.27 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
ஆயுள் பலவீனமான பிள்ளையை விற்று வாங்கும் செயலில் ஈடுபடல்

**ரிஷபம்**
நிர்வாக சபைகளில் அங்கத்தவராக தெரிவு செய்யப்படல்

**மிதுனம்**
நீண்ட நாளைய நட்பு பணக் கொடுக்கல் வாங்கலினால் பிரிந்து விடல்

**கடகம்**
புதியன கொள்வனவு செய்கையில் நம்பகத்தில் விழிப்பாக இருக்கவும்

**சிம்மம்**
வாகன யோகம் கிட்ட பிதா உதவி செய்தல்

**கன்னி**
கன்னியர் தொடர்பினால் மான பங்கம் ஏற்படல்

**துலாம்**
விதிமுறைக்கு மாறாக மனையை அமைத்தமையினால் விசாரணைக்கு அழைத்தல்

**விருச்சிகம்**
டெங்கு நோய் பரவக் காரணமாக இருந்தமையயிட்டு அபராதம் விதிப்பு

**தனுசு**
பாலியல் துஷ்பிரயோகம் ஏற்பட விருந்த சமயம் தெய்வ சகாயத்தால் தப்பி விடல்

**மகரம்**
ஐரோப்பிய நாடுகளில் விசா வின்றி இருப்போர் குடியுரிமைப் பெண்மணிகளை விவாகம் செய்ய விரும்புதல

**கும்பம்**
தலைக்கவசமின்றி பயணித்த வேளை அபராதம் விதித்தல்

**மீனம்**
நடக்க முடியாது என எண்ணிய விடயம் நடந்ததை எண்ணி ஆச்சரியப்படல்

## இலங்கை வீரர்களுக்கு அபராதம்



பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பந்து வீசுவதற்கு தாமதம் ஏற்பட்டதாக இலங்கை வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதில் இலங்கை அணித் தலைவர் மத்யூஸுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 20 சதவீதமும், மற்ற வீரர்களுக்கு 10 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

# அரை இறுதிக்கு முன்னேறியது இந்தியா

உலக ஹொக்கி லீக் காலிறுதியில் அசத்திய இந்திய ஆண்கள் அணி, 3–2 என்ற கோல் கணக்கில் மலேசியாவை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

உலக ஹொக்கி லீக் தொடரின் இரண்டாவது சுற்று அரையிறுதி பெல்ஜியத்தில் நடக்கிறது. இதில் ஆண்களுக்கான காலிறுதிப் போட்டியில் இந்திய அணி, மலேசியாவை சந்தித்தது. போட்டி தொடங்கிய 4ஆவது நிமிடத்தில் ஆகாஷ்தீப்பிடம் இருந்து பந்தை பெற்ற சத்பிர் சிங், அப்படியே கோலாக மாற்ற இந்திய அணி 1–0 என, முன்னிலை பெற்றது.

தொடர்ந்து போட்டியின் 14, 23 ஆவது நிமிடங்களில் கிடைத்த 'பெனால்டி கார்னர்' வாய்ப்புகளை ரஹிம், ஷாரில் கோலாக மாற்ற, முதல் பாதியில் இந்திய அணி 1–2 என, பின்தங்க நேரிட்டது.

கடைசி 15 நிமிடத்தில் இந்திய அணி வீரர்கள் திடீரென எழுச்சி பெற்றனர். 48ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி கார்னர்' வாய்ப்பில், ஜஸ்ஜித் சிங் கோல் அடித்தார். தொடர்ந்து 56ஆவது நிமிடத்தில் கிடைத்த மற்றொரு 'பனால்டி கார்னர்' வாய்ப்பையும் ஜஸ்ஜித் சிங் வீணாக்காமல் கோலாக மாற்ற இந்திய அணி 3–2 என, முன்னிலை பெற்றது.

இதை சமன் செய்ய மலேசிய அணி வீரர்கள் எடுத்த முயற்சி பலிக்கவில்லை. போட்டியின் கடைசி நிமிடத்தில் மலேசிய அணிக்கு கிடைத்த 'பெனால்டி கார்னர்' வாய்ப்பை வீணாக்கினர். முடிவில் இந்திய அணி 3–2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.




## வென்றவரின் கோரிக்கை



கடந்த வாரம் நடந்த கனடா ஓபன் பட்மின்ரன் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி-ஜுவாலா கட்டா ஜோடி பெண்கள் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றது. போட்டி முடிந்து ஐதராபாத் திரும்பிய ஜுவாலா கட்டா நேற்றுமுன்தினம் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

கனடா ஓப்பன் போட்டியில் வெற்றி பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. முன்னணி வீரர்களுக்கு தேவையான எல்லா ஆதரவும் எங்களுக்கும் தேவையாளதாகும். ஒற்ற்றயர் பிரிவு வீரர்களுக்கு கிடைக்கும் ஆதரவு எஙகளுக்கும் கிடைக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அஸ்வினியும், நானும் இணைந்து அடுத்த ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் நிச்சயம் பதக்கம் வெல்ல முடியும் என்று நம்புகிறோம்.

கனடா ஓப்பன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று இருக்கும் இந்த சமயத்திலாவது மத்திய விளையாட்டு அமைச்சகம் எங்களுக்கு உதவ முன்வரும் என்று நம்புகிறோம். அரசு உதவியால் தான் பல வீரர்கள் விளையாட்டில் சாதித்து வருகிறார்கள். அரசு உதவி இல்லாவிட்டால் விளையாட்டில் நீடிப்பது என்பது முடியாத காரியம்.

அரசு உதவி கிடைக்காவிட்டால் யாரும் இரட்டையர் ஆட்டத்தை தேர்வு செய்யமாட்டார்கள். நான் கூட உதவி கிடைக்காததால் தான் கலப்பு இரட்டையர் ஆட்டத்தை கைவிட்டேன். ஒலிம்பிக்கில் பட்டம் வெல்வது என்பது எளிதான காரியம் அல்ல. அதில் வென்றால் மிகப்பெரிய நிம்மதி கிடைக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## சங்கக்கார இல்லை




பாகிஸ்தான் அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியில் சங்கக்காரா இடம்பெறமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கக்காரா ஏற்கனவே தான் பாகிஸ்தானுக்கு எதிராக 2 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாட இருப்பதாக இலங்கை கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்திருந்தார்.


அதன் படி, தனிப்பட்ட காரணத்திற்காக 3ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளார். இவருக்கு பதிலாக உபுல் தரங்கா அணியில் இணைந்துள்ளார்.

உபுல் தரங்க, இறுதியாக கடந்த வருடம் கொழும்பில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் பங்குபெற்றார்.

தற்போது இவர் மீதமுள்ள ஒரு டெஸ்ட் போட்டி, 5 ஒருநாள் போட்டித் தொடர் மற்றும் 2 டி20 போட்டி ஆகியவற்றில் விளையாடவுள்ளனர்.

உபுல் தரங்கா, 177 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 5343 ஓட்டங்களையும், 19 டெஸ்ட் போட்டிகளில் 1019 ஓட்டங்களையும் எடுத்துள்ளார்.

## நியூசிலாந்து வெற்றி




இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது

இதில் முதல் ஒரு நாள் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

இதைத் தொடர்ந்து பெங்களூரில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்று 1-1 என்ற கணக்கில் தொடரை சமன் செய்துள்ளது.

விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் வரலாற்றில் பகல்–இரவு டெஸ்ட் ஆட்டம்



கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக பகல்–இரவு டெஸ்ட் நடத்தப்படுகிறது. நவம்பர் மாதம் அடிலெய்டில் நடைபெறும் பகல்–இரவு டெஸ்டில் அவுஸ்ரேலியா– நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில் இந்தியா–பாகிஸ்தான் அணிகள் பகல்–இரவு டெஸ்டில் மோத வேண்டும் என்று பாகிஸ்தான்




முன்னாள் கட்டன் ரஷித் லத்தீப் விருப்பம் தெரிவித்துள்ளார். டிசம்பர் மாதம் ஐக்கிய அரபு எமிரேட்டில் இந்தப் போட்டியை நடத்த வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சச்சின் இத்தாலியில் குடும்பத்தோடு சுற்றுலா

(ரோம்)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் தனது குடும்பத்தோடு இத்தாலிக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

அங்கு ரோம் நகரில் தனது மனைவி அஞ்சலி, மகள் சாராவுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை பேஸ்்புக்கில் பகிர்ந்து கொண்டுள்ளார்.



# கூடைப்பந்தாட்டப் போட்டி
# 3 ஆம் இடம் பிடித்த பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந் தாட்ட சங்கம், யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடாத்தி வரும் கூடைப்பந்தாட டப் போட்டியில் மூன்றாமிடத் தினை ஆண்கள் பிரிவில் யாழ்.இந்து பெண்கள் பிரிவில் வேம்படி, உடுவில் மகளிர் கல் லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகியன பிடித்துக் கொண்டன.

யாழ்.மத்திய கல்லூரி மைதா னத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டியில் 13 வயதுப் பிரிவினருக்கான ஆண்கள் பிரிவில் சென்.பற் றிக்ஸை எதிர்த்து ஆடிய யாழ்.இந்து கல்லூரி 14:29 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்ற பெற்றுள்ளது.

13 வயதுப் பிரிவினருக்கான பெண்கள் பிரிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியை எதிர்கொண்ட வேம்படி மகளிர் 8:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

17 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் சுன்னாகம் இராம நாதன் கல்லூரியுடனான போட் டியில் 24:40 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றது.

15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் யாழ்.இந்து மகளிர் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அணிகள் மோதின. இதில் இந்து மகளிர் 13:6 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றது. (93)

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள்



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் HOPE செயற்றிட்டத்தின் கீழ் சண்டி லிப்பாய் பிரதேச செயலக பிரி வுகளிலுள்ள இளைஞர் கழகங் களுக்கு வழங்கப்பட்ட விளை யாட்டு உபகரணங்களில் இருந்து ஒரு தொகுதி உபகர ணங்கள் சண்டிலிப்பாய் இந்துக கல்லூரிக்கு வழங்கப்பட்டன.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை உத்தியோ கத்தர் எஸ்.ரஜீவன், வலி.தென். மேற்கு பிரதேச இளைஞர் நாடா ளுமன்ற உறுப்பினர் க.உஷாந் தன் ஆகியோர் இதனைக் கையளிக்க பாடசாலை அதிபர் கு.விமலன் பொறுப்பாசிரியர் மாணவர்கள் இணைந்து பெற் றுக் கொண்டனர்.

அண்மையில் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இவை கையளிக்கப்பட் டன. (48)

# ஆண்டு நிறைவை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டி

நல்லூர் சங்கிலியன் மன் றத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்ற முன்றிலில் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட் டியாளர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட் டுள்ளனர்.

ஆண்களுக்கான போட்டிகளாக 3 மைல் மரதன் ஓட்டம், சறுக்கு மரம் ஏறுதல், தலை யணைச் சமர், மெதுவான சைக்கிளோட்டம், கண் கட்டி முட்டி உடைத்தல் ஆகியனவும், பெண்க ளுக்கான போட்டிகளாக கண்கட்டி யானைக்குக் கண் வைத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், கயிறு இழுத்தல் (7 பேர்) சங்கீதக் கதிரை, ஆள்காட்டி விரலால் தண்ணீர் போத்தல் தூக்குதல் ஆகியனவும் இடம் பெறவுள்ளன.

ஒவ்வொரு போட்டிக்கும் தனியான விண் ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும் போட்டிக்குரிய கட்டணங்கள் செலுத்திப் பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண் டும். குறிப்பிட்ட போட்டிக்கு 5 போட்டியாளர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அப்போட்டி இரத்து செய்யப்பட்டு செலுத்திய பணம் மீளளிப்புச் செய்யப்படும் குறிப்பிட்ட திகதிக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (137)




**இந்திய கிரிக்கெட் வீரர்களை அவமானப்படுத்தி அரைமொட்டை அடித்து பங்களாதேஷ் பத்திரிகை சர்ச்சைக்குரிய விளம்பரத்தை வெளியிட்டுள்ளது. இதற்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் அதுல்வாசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

# ஐ.பி.எல். அணியை வாங்க தயாராகும் ஜிண்டால் குழுமம்



ஐ.பி.எல். அணி ஒன்றை வாங்க தீவிரமாக இருக்கும் ஜிண்டால் குழுமம் ஆர். சி. பி. அணியை வாங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2008ஆம் ஆண்டு ஐ.பி.எல். அணி ஏலத்தில் அதிக விலைக்கு எடுக்கப்பட்ட 2 ஆவது அணி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் என்பது குறிப்பிடத்தக்கது. ஹோலி தலைமையிலான இந்த அணியில் கெயில், டி வில்லி யர்ஸ் போன்ற பல பிரபலமான சர்வதேச வீரர்கள் இடம் பெற்றுள்ளார்கள். இந்நிலையில் கடுமையான கடனில் சிக்கி தவித்துவரும் அணியின் முதலாளியான மல்லையா அணியை விற்க முடிவு செய்தி ருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக ஜே. எஸ். டபிள்யூ ஸ்டீல் நிறுவன தலைவர் சாஜன் ஜிண்டால் கூறும் போது இந்தியாவின் முதல்தர விளை யாட்டாக கிரிக்கெட் இருக்கி றது.

இதனால் ஐ.பி.எல். அணிக ளில் ஒன்றைக் கைப்பற்றுவதில் மிகுந்த ஆர்வத்துடன் உள் ளோம். ஆனால் எந்த அணியை நான் வாங்கப் போகிறேன் என்று கருத்துத் தெரிவிக்க இயலாது. பணம் ஒரு பெரிய விஷயமில்லை. இந்த விளையாட்டை மேம்ப டுத்துவதில் விருப்பத்துடன் உள் ளோம் என்றார்.

ஆனால் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை விஜய் மல்லையா விற்க முடிவு செய்துள்ளார் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

# சொகுசு பங்களா



இந்திய கிரிக்கெட் அணியின் துணை அணித்தலைவர் விராட் ஹோலி, டில்லியில் ரூ.80 கோடிக்கு சொகுசு பங்களா ஒன்றை வாங்கியுள்ளார்.

விராட் ஹோலி கிரிக்கெட் வீரர்களில் அதிகம் சம்பாதிக்கும் வீரர்களில் ஒருவராக இருக் கிறார்.

இவர் மேற்கு டில்லியில் உள்ள பாஷிம் விஹாரில் 3 அறை கொண்ட வீட்டில் தனது தாய் மற்றும் அண்ணனுடன் வசித்து வருகிறார். அவருக்கு மீரா பாக் பகுதியிலும் வீடு உள்ளது.

இந் நிலையில் அதே பகுதியில் பஞ்சாபி பாக் என்ற இடத்தில் ரூ.80 மதிப்புள்ள சொகுசு பங்களா ஒன்றை வாங்கியி ருக்கிறார்.




**இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் அகில இலங்கை கால்பந்தாட்ட லீக் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடைபெற்ற தென்கொரியா - இலங்கை நட்புறவுக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.**

**இப்போட்டியில், இறுதிநேரத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ்ப்பாண லீக் அணி, சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றிக் கிண்ணத்துடன் சம்பியன் அணியைக் காணலாம்.**

# தமிழர்களில் உள்ள சிறுபான்மையான சில பைத்தியக்காரர்களினது முஸ்லிம் விரோத இனவாதம்

**இசத் ஹூசைன் கட்டுரையிலிருந்து.**

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சமீபத்தைய அறிக்கை இப்போது எல்.ரீ.ரீ.ஈ யின் ஒரு புத்துயிர்ப்பு நடை பெறுகிறது என்பதை சொல் கிறது: "எல்.ரீ.ரீ.ஈ அதன் சர்வதேச தொடர்புகள் மற்றும் வட அமெரிக்கா, ஐரோப்பா, மற்றும் ஆசியா என்பனவற்றில் உள்ள தமிழ் புலம்பெயர்ந்தவர்கள் ஆகியோரை பயன்படுத்தி ஆயுதங்களை கொள்வனவு செய்தல், தொடர்பாடல்களை நடத்துதல் மற்றும் ஏனைய அவசிய மான தேவைகளுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. தங்கள் செயற்பாடு களுக்கு நிதி சேகரிக்கவும் மற்றும் நிதியை திசை திருப்பவும் அது அறக்கட்டளைகளை முன்னிலை யாக பயன்படுத்தி வருகிறது".



Izeth-Hussain

அமெரிக்காவின் அறிக்கையி லுள்ள, ஆயுதங்களை கொள்வனவு செய்வது பற்றிய விபரங்கள் அதிர்ச்சி தரும் ஒரு செய்தி. இந்த அறிக்கையின் விளைவாக, பாராளுமன்றத்தில் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, சர்ச்சைக்குரிய உலகத் தமிழர் பேரவைத் தலைவர் மற்றும் சிலருடன் லண்டனில் நடத்திய சந்திப்பு தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கு வழி கோலியது.

ஜூன் 21இல் சண்டே ஜலன்ட் இல் குமார் டேவிட், வடமா-காண முதலமைச்சர் சி.விக்னேஸ்வரன் தமிழர்களின் தலைவராக மாறும் தனது இலட்சியத்தை வெளிப்படையாகவே விருத்தி செய்கிறார் என்பது பற்றி எழுதியுள்ள கட்டுரையை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எனவே அதன் காரணமாக அவர் அரசாங்கத்துடன் ஒரு மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறார். அவர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் தனிமைப்படுத்தப்பட்ட பின்பு, சாட்சிபூர்வமான அர்த்தம் பகரும் எல்.ரீ.ரீ.ஈ யின் பக்தர்களாகிய கடும்போக்கு தமிழ் புலம் பெயர்ந்த வர்களின் உதய சூரியனாகவும் மாறியுள்ளார்.

பல தசாப்தங்களாக சிங்களவர்கள் தமிழர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதையும் மற்றும் அந்தப் பாகு பாட்டுக்கு முஸ்லிம்கள் துணை போவதையும் பற்றி நான் விமர்சித்து வந்திருக்கிறேன். ஆனால் திடீரென எனது கட்டுரைகளுக்கு எதிராக தமிழ்த் தரப்பிலிருந்து தாக்குதல்கள் எழுந்தன.

தமிழ் இனவாதிகளால் எனக்கு எதிராக தொடர்ச்சியாக இரண்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வந்துள்ளன, அதை எல்.ரீ.ரீ.ஈ யின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மட்டுமே அர்த்தம் தெரிகிறது.

முதலாவது குற்றச்சாட்டு நான் பல தசாப்தங்களாக படுபயங்கர மான தமிழருக்கு எதிரான இனவா தியாக இருந்து வருகிறேன் என்பது. உண்மையில் அது முழு முட்டாள்தனமானது. மற்றும் அது அவர்களுக்கும் தெரியும், ஆனால் அவர்கள் அதை நம்பும்படி காட்ட முயற்சிக்கிறார்கள். எனது முந்தைய கட்டுரையில் தமிழர்கள் அல்லாதவர்கள் ம்த்தியில் ஓரளவு விதிவிலக்காக தமிழர்கள் மீது அனுதாபம் காட்டும் ஒருவனாக என்னைக் கணித்துள்ளார்கள் என்பதற்கு ஆதாரமான விப்ரங்களைக் கொடுத்திருந்தேன்.

உண்மை என்னவென்றால் எல்.ரீ.ரீ.ஈ வ்கையான தமிழர்கள் நான் தமிழர்களுக்கு விரோதமானவன் என்பதை நம்பவேண்டும் என்கிற ஒரு கட்டாயத்தில் இருந்தார்கள், இதன் பின்னாலிருந்த பைத்தியக்காரத் தனமான தர்க்கம் பின்வருமாறாக அமைந்திருந்தது: எல்.ரீ.ரீ.ஈக்கு ஈழ விவகாரம் மட்டுமே முக்கியமாக இருந்தது, அந்த வழிக்கு குறுக்காக நிற்பவர்கள் தமிழர்களுக்கு விரோத மானவர்கள் என்று கருதப்பட வேண்டும் என்பதாக இருந்தது, என்னைப் போன்ற முஸ்லிம்கள் உட்பட.

எனது கருத்து என்னவென்றால்

---

# தவறான பாதையில் தமிழ் தேசியம், தடுக்கும் நடவடிக்கையில் புலிகள்!

**- புரந்திரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சொத்து ஆகும். புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனே இக்கூட்டமைப்பை உருவாக்கினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய வற்றை இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இதன் தலைவர் அடங்கலாக கட்சியின் பதவி நிலை முக்கியஸ்தர்கள் புலிகளின் தலைவராலேயே பெயர் குறிப்பிடப்பட்டு நியமிக்கப்பட்டனர். அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களையும் புலிகளே தீர்மானித்தார்கள்.




Sampanthan and Thamil...

புலிகளின் அரசியல் படையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுப்பெற்றது. தலைவர் பிரபாகரன் அவ்வப்போது இவர்களை வரவழைத்து ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கு கின்றமையை வழக்கமாக்கி வைத்திருந்தார்.

இவர்களின் சுய புத்தியில் தலைவர் பிரபாகரனுக்கு பெரிதாக நம்பிக்கை இருந்திருக்க வில்லை. எனவே தலைவரின் சொல் புத்திப்படிதான் இவர்கள் நடக்க வேண்டி இருந்தது. அத்துடன் இவர்களைக் கண்டிக்கின்ற, தண்டிக்கின்ற உரிமையையும் தலைவர் கொண்டிருந்தார்.

இதே நேரம் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள், பிரபாகரனே தேசியத் தலைவர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளின் தூதுவர்களை சந்தித்துப் பேசியபோதெல்லாம் ஒரு குரலில் கூறி வந்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புலிகளின் அங்கமாக இலங்கை மாத்திரம் அன்றி சர்வதேச சமூகமுமே பார்த்தது.



இதனால்தான் சம்பந்தன் அடங்கலாக தமிழ் தேசிய கூட்டமைப்புப் பிரமுகர்கள் சில்ருக்கான விசாக்கள் அமெரிக்காவால் நிராகரிக்கப்பட்டன.

ஆனால் 2009 ஆம் ஆண்டு புலிகள் இயக்கம் செயல் இழந்த பிற்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளில் வெளிப்படையாகவே மாற்றம் தெரிகின்றது. புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டதைப் பாராட்டி நாடாளுமன்றத்தில் சம்பந்தன் உரையாற்றினார். புலிகள் இயக்கத் தால் துரோகிகளாக, விரோதிகளாக, வேண்டத் தகாதவர்களாக, தீண்டத் தகாதவர்களாகக் காணப்பட்டு வந்திருக்கக் கூடிய சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல்களில் குடை, ஆலவட்டம் பிடித்து, சாமரை வீசி, பல்லக்கு சுமந்து சேவை செய்கின்றது. சுதந்திர தின விழாவிலும் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் பங்குபற்றினார்கள்.

ஆபரணங்கள் அணிந்த ஒரு பெண் தனியாக நள்ளிரவில் வீதியால் நடந்து வருகின்ற சூழல் வன்னிக் கட்டுப்பாட்டுப் பகுதியில் முன்பு காணப்பட்டது என்பது விமர்சனங்களுக்கு அப்பால் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற விடயம் ஆகும். ஆனால் மாவை சேனாதிராசா அடங்கலாக இன்றைய தமிழ் கூட்டமைப்புப் பிரமுகர்களாலேயே தமிழ் பெண்களின் கற்பு, மானம், கௌரவம் ஆகியன விலை பேசப்படுகின்றன. தமிழ் யுவதிகளை வைத்து ஆபாச படங்கள் எடுக்கின்றனர் தமிழ் கூட்டமைப்புக்காரர்கள்.

வன்னியில் புலிகள் ஆட்சி நடத்தியபோது ஒரு சாராயக் கடைகூட இருந்தது இல்லை என்றே கூற லாம். ஆனால் வடக்கின் பல இடங்களிலும் இன்று சாராயக் கடைகளுக்கான அனுமதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் வழங்கப்பட்டு உள்ளன.

புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகள் இயக்க முன்னாள் போராளி-களை ஒதுக்கியும், ஒடுக்கியும் நடக்கின்றது. தேர்தல் காலங்களில் மாத்திரம் கறிவேப்பிலை போல முன்னாள் புலிகளையும், மாவீரர் குடும்பங்களையும் பயன்படுத்தி விட்டு கசக்கி எறிகின்றது.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இன்று ஒற்றுமை இல்லை. கழுத்தறுப்புக்களும், காட்டிக் கொடுப்புக்களுமே மிதமிஞ்சிக் காணப்படுகின் றன. பதவிகள், ஆசனங்கள், வாகனங்கள், பட்டங்கள், மாலைகள் போன்றவற்றுக்காகவே இவர்களின் அரசியல் இடம்பெறுகின்றது.

தவறான் பாதையில் சென்று கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கடிவாளம் போட தமிழ் புத்திஜீவிகள் பலரும் முயன்று வருகின்றபோதிலும் இது முடியாத காரியமாகவே தோன்றுகின்றது.

இந்நிலையில் இது வரை காலமும் அமைதி காத்த முன்னாள் புலிப் போராளிகள் தற்போதைய தேர்தல் சூழலில் உறுதியான ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளார்கள். நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட முடிவெடுத்து உள்ளார்கள். இம்முடிவை தற்போதைய த்மிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமைக்கும் தெரியப்படுத்தி உள்ளனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் கணிசமான தொகையினர் முன்னாள் புலிகளாக இருக்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கை. இல்லையென்றால் புலிகளால் உருவாக்கப்பட்ட இக்கூட்டமைப்பை புலிகளிடமே தந்து விட்டு ஒதுங்குங்கள் என்று இவர்கள் உரிமையுடன் கேட்கின்றார்கள்.

சாதாரண தமிழரில் உள்ள சிறுபான்மை இனவாதி தனது தார்மீக உணர்வை மொத்தமாக இழந்து விட வில்லை என்பதாகும். அவரது விடயத்தில் பளிச்சிடும் விளக்கம் என்னவென்றால், அவரது முஸ்லிம் விரோத இனவாதத்தில் உள்ள தீவிரம் அவரது சிங்கள எதிர்ப்பைக் காட்டிலும் மிகவும் அதிகம்.

தமிழர்களின் சாதி அமைப்பு மிக அதிகம் இறுக்கமானது, சிங்களவர்களுடையதைக் காட்டிலும் மிக அதிகமான படிநிலை அமைப்பைக் கொண்டது. மலையகத் தமிழர்களுடன் எந்த விதமான ஐக்கிய உணர்வையும் கட்டியெழுப்பத் தவறியமைக்கான அதிர்ச்சி தரும் உண்மைதான் இந்த விளக்கத்தின் ஒரு பகுதியாகும்.

முஸ்லிம்களை தாழ்ந்தவர்களாக கருதுவதற்கு சிங்கள இனவாதிகளைக் காட்டிலும் தமிழ் இனவாதிகள் அதிக நாட்டம் காட்டுவார்கள் எனக் கருதுவது நியாயமானது எனத் தெரிகிறது. உளவியல் ஆய்வாளரான சிக்மன்ட் பிராய்ட் சுட்டிக்காட்டியுள்ள கிட்டத்தட்ட ஒரேமாதிரியான மக்களிடையே இடம்பெறும் சமரசத்திற்கு இடமில்லாத மிகக் கொடூரமான சண்டைகளைப் பற்றிய உண்மைதான் என் மனதிலும் ஓடுகிறது. தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஒரு பொதுவான மொழியியலைக் கொண்டுள்ளார்கள்.

மீண்டும் ஒருமுறை நான் வலியுறுத்த வேண்டியது, தமிழரின் இனவாதம் தொடர்பான எனது கண்டனங்கள் யாவும் பிரயோகிக்கப்பட வேண்டியது ஒரு சிறிய பகுியான தமிழர்களிடையே மாத்திரமே; எல்லா தமிழர்களிடத்தும் அல்ல. மேலும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையே அவர்களில் எந்தப் பகுதியினரும் சிங்களவர்களிடம் கொண்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பான பரஸ்பர ஒத்துணர்வு காணப்படுகிறது.


தமிழர்களிடையே உள்ள சிறு பிரிவினர் எனக்கு எதிராக ஏன் இத்தனை வெறுப்பையும் சீற்றத்தையும் திருப்பி விட வேண்டும்? அதற்கான விளக்கமாக நான் நம்புவது, வழக்கமான முஸ்லிம்களின் ஒரே தன்மையதான சிறந்த தொழிலதிபரின் தன்மையுடனோ அல்லது சிறப்பான போதை மருந்து கடத்தல்காரர்களின் தன்மையுடனோ சேருவதற்கு நான் பொருத்தமற்றதாக இருப்பதுதான்,

இதற்கு முரண்பாடாக கடந்த பல தசாப்தங்களாக நான் கீழ்வரும் தோற்றங்களைக் கொண்டிருக்கின்றேன்: ஒரு பொது அறிஞனாக, உயர்ந்த கல்வித் தகைமை கொண்ட எழுத்தாளனாக, ஒரு அரசியல் ஆய்வாளனாக, இலக்கிய உலகின் ஒரு அங்கத்தவனாக, கலாச்சார ரீதியில் முற்றிலும் மேற்கத்திய நாகரிகம் கொண்டவனாக மற்றும் முற்றிலும் அறிவைப் பயன்படுத்துபவனாக இருந்திருக்கின்றேன்.

இதன் விளைவாக ஒரு தமிழ் இனவாதி எனது கட்டுரை ஒன்றை வாசிக்கும்போது மிகைப்பாடான வெறுப்பு நிலைக்கு ஆளாகிறார். அது வெறிபிடித்த ஆத்திரத்தை அவருள் தூண்டி விடுகிறது. வாரக்கணக்காக என்மீது தாக்குதலை மேற்கொண்டிருந்தவர்களில் ஒருவர் அவரது முதல் பந்தியில் தவிர்க்க முடியாத அர்த்தமற்ற சொற்களான, முட்டாள், பைத்தியம், அறிவற்றவன், மூடன், மனோதிடம் இல்லாதவன் போன்றவற்றை பயன்படுத்தியிருந்தார்.

அவருக்கும் மற்றும் ஏனைய தமிழ் இனவாதிகளுக்கும் எனது சிநேகபூர்வமான அறிவுரை: இனவாதம் ஒரு நோய். அதிலிருந்து சீக்கிரம் குணமடைவீர்களாகுக.

# ஒரு நள்ளிரவிற்குப் பின்



வெற்றிலை கொப்பளித்து துர்நாற்றம் வீசும்
எச்சில் வாய்களோடு - சிலர்
இனிச் சிலகாலம் எங்கள்
காலடிகளைச் சுற்றிவருவார்கள்
என் அக்காளையும் அண்ணன்களையும்
புனிதர்கள் என்று புகழ்வார்கள்
கல்லறைகளை கோயில்களாக்குவதாய்
கதைவிடுவார்கள்
இருக்கிறதை வைத்துக்கொண்டு
இல்லாததைப் புடுங்குவோம் என்பார்கள்
பல்லுக்காட்டி சொகுசு வாகனம்
வாங்கமாட்டோமென்பார்கள்
மத்தியில் அரசோடு ஒட்டு-உறவில்லை என்பார்கள்
பின் எங்கள் விடுதலைக்காய் - இரகசிய
ஒப்பந்தங்கள் பல செய்ததாய் பிதற்றுவார்கள்
எங்கள் வீட்டு மதில்களில் பல்லை இளிப்பார்கள்
தாங்களே எங்கள் மீட்பர்கள் என்பார்கள்
எங்கள் படலைகளில் தவமிருப்பார்கள்
வீட்டுக்கு (வந்து) போடுங்கள் புள்ளடி என்பார்கள்
பின் எங்கள் தலையில் மிளகாய் அரைப்பார்கள்
தங்கள் குழந்தை குட்டிகளை
வெளிநாடு அனுப்புவார்கள்
சொகுசுக்கார்கள் வாங்குவார்கள்
சர்வதேசம் நோக்கியும் தமிழகம் நோக்கியும்
சொற்கணை தொடுப்பார்கள்
என் அக்காளையும் அண்ணன்களையும்
சந்திக்கு இழுப்பார்கள்
தங்கள் பலம்பற்றிப் பேசுவார்கள்
எங்களுக்கு வேறு வழி இல்லை என - எள்ளி
நகையாடுவார்கள்
எங்களை மறந்துபோவார்கள்
சொந்தக்காரர்களுக்கு-வேலை வாங்கிக் கொடுப்பார்கள்
பன்முகமாய் அரசிடம் நிதிவாங்கி உண்பார்கள்
மீண்டும் ஒரு நள்ளிரவிற்குப் பின்
எங்கள் காலடிகளைச் சுற்றி வருவார்கள்
என் அக்காளையும் அண்ணன்களையும்........

**- அருமைத்துரை யசீகரன்.**

# மஞ்சள் நிறமாக இருந்தால்...

❖ பால் வாங்கியவுடன் காய்ச்சிவிட வேண்டும். காய்ச்சிய பாலை சில மணி நேரத்துக்குப் பிறகு பயன்படுத்த வேண்டும் என்றால் மறுபடியும் காய்ச்ச வேண்டும். பிரிஜ்ஜில் வைக்க வேண்டும் என்றால் நன்றாக ஆற வைத்து வைக்க வேண்டும்.

❖ பாலை நன்றாகக் காய்ச்சி ஆற விட்டால் அதன் ஆடை மஞ்சள் நிறமாக இருந்தால் பசும்பால். வெள்ளை நிறமாக இருந்தால் எருமைப்பால்.

❖ பாலை உறை ஊற்றும்போது அதனுடன் சிறிது சீனி போட்டு வைத்தால் மூன்று நாள்கள் வரை தயிர் புளிக்காமல் இருக்கும்.

❖ குளிர்காலத்தில் பாலை உறை ஊற்றினால் சரியான தயிர் கிடைக்காது. ஆனால் பாலைக் காய்ச்சி அது வெது வெதுப்பாக இருக்கும்போது வழக்கத்தைவிட இரண்டு மடங்கு உறை மோரை ஊற்றினால் நல்ல தயிர் கிடைக்கும்.

❖ சுத்தமாகக் கழுவ முடியாத வாய் குறுகலான பாத்திரத்தில் பாலை வைக்கக் கூடாது.



# ஊரும் உலகமும்

## வரலாற்று நூலுக்கு தவறான தடை



இந்தியாவின் பண்டைக்கால வரலாறு பற்றிப் பல ஆய்வு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இந்திய வரலாற்று ஆய்வாளர்கள் மாத்திரமன்றி வெளிநாட்டவர்களும் இத்துறையில் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். இந்திய அறிஞர்கள் எழுதிய நூல்களுள் எஸ்.ஏ.டாங்கேயின் "பண்டைக்கால இந்தியா", டி.டி. கோசாம்பியின் "பண்டைய இந்தியா", ஆர்.எஸ். சர்மாவின் "பண்டைக்கால இந்தியா" ஆகியவை பிரபல்யமானவை.

ஆர்.எஸ்.சர்மா பாட்னா பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற வரலாற்றுப் பேராசிரியர். இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் முதலாவது தலைவராகவும் பதவி வகித்தவர். இவர் எழுதி வெளியிட்ட "பண்டைக்கால இந்தியா" என்ற நூல் இந்திய வரலாற்று அறிஞர்களாலும் சான்றோர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டது. இந்த நூலுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தை இந்திய அரசாங்கம் 1977 இல் ரத்துச் செய்தது. பின்னர் அந்த முடிவு தவறானது என்பதை ஏற்றுக்கொண்டு 1980 இல் மீண்டும அங்கீகாரம் வழங்கியது.

## வெளிவிவகார அமைச்சை ஜே.ஆர். ஓரங்கட்டினார்



சோவியத் படைகள் 1979 டிசம்பர் மாதத்தில் ஆப்கானிஸ்தானுக்குள் பிரவேசித்தன. இதைச் சோவியத் ஆக்கிரமிப்பாகக் கருதிய ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அமைச்சரவை கடுமையான கண்டன அறிக்கையொன்றினை வெளியிட விரும்பியது. அந்த அறிக்கையைத் தயாரிக்கும்படி வெளிவிவகார அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் பணிக்கப்பட்டார். அவர் தயாரித்த வரைபு ஜே.ஆருக்கும் பெரும்பாலான அமைச்சர்களுக்கும் திருப்தி அளிக்கவில்லை ஜே.ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் அமைச்சர்கள் குழுவொன்று கடுமையான தொனியில் அறிக்கையொன்றை தயாரித்து வெளியிட்டது.

இச் சம்பவத்திற்குப் பின்னர் வெளிவிவகார அமைச்சில் ஜே.ஆர். ஜயவர்த்தன அதிகளவு நம்பிக்கை வைக்கவில்லை. வெளியுறவுக் கொள்கை தொடர்பான முக்கிய முடிவுகளை ஜே.ஆர் நேரடியாக அல்லது அவரின் நம்பிக்கைக்குரிய சில அமைச்சர்களின் உதவியுடன் மேற்கொண்டார். இந்தியா தொடர்பான கொள்கையை ஜனாதிபதியின் செயலகமே தீர்மானித்தது.

## காந்தியின் பிரேரணை தோல்வி



1885 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் ஜனநாயக அடிப்படையில் இயங்கியது. ஒவ்வொரு பிரேரணையும் வாக்களிப்புக்கு விடப்பட்டுப் பெரும்பான்மை முடிவு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

முக்கிய தலைவர்களின் பிரேரணைகள் கூடத் தோற்கடிக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. மகாத்மா காந்தி காங்கிரஸ் இயக்கத்தில் உயர்வாக மதிக்கப்பட்ட தலைவர். ஆங்கிலேயர்களின் போர் முயற்சிகளுக்குக் காங்கிரஸ் ஒத்துழைக்க வேண்டும் என்ற பிரேரணையை 1942 ஜனவரியில் காந்தி கொண்டுவந்தார். அப்பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

## தேசிய ஒருமைப்பாடு

இந்தியாவில் I.A.S., I.P.S. போன்ற உயர் பதவிகளுக்கு மாநில மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நியமனங்களில் அரைவாசிப் பேராவது மற்றைய மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற விதி இன்று வரை பின்பற்றப்படுகின்றது.

# யா /புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்



பாடசாலை நுழைவாயில்

2011ஆம் ஆண்டிற்கு முன்னர் யா/புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கி வந்தது. 2011ஆம் ஆண்டில் முதன் முறையாக தரம் 10, 11 ஆரம்பக் கல்வி அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டது. அதுவரை காலமும் வகை 3 பாடசாலையாக இருந்து தற்போது வகை 2 பாடசாலையாக 22 ஆசிரியர்களுடனும் 300 மாணவர் களுடனும் இயங்கி வருகின்றது. வருடம் தோறும் புலமைப்பரிசில் பரீட் சையில் 2 மாணவர்கள் சித்தியடைவதோடு 70% மான மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தியடைகின்றனர்.

க.பொ.த (சா/த) பெறுபேறு வருடந்தோறும் அதிகரித்துச் சென்று தற்போது 40% ஆகக் காணப்படுகின்றது. இந்த வருடம் 50% ஆக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு மேலதிக வேலைத் திட்டங்கள், செயற் றிட்டங்கள் ஆசிரியர்க ளால் நடைமுறைப்படுத் தப்படுகின்றது பௌதீக வளத் தேவைகள் பெரும் பாலும் நிறைவேற்றப்பட் டுள்ளன.

பெற்றோர், பழைய மாணவர் கள் ஒத்துழைப்பு அதிகமாகக் கிடைப்பின் மேலும் முன் னேற்ற முடியும் என எதிர்பார்க்கப்படுகின் றது


பாடசாலை அதிபர் திரு. த. லோகராஜா
(சேவைக்காலம் 5 வருடங்கள்)


பாடசாலை ஆசிரியர் குழாம்

பாடசாலை மாணவர்கள்














வாரம் ஒரு பாடசாலை









# கடனை மீளச் செலுத்த முடியாமல் போவதில் வங்கிகளிடம் உதவி கோர முடியாத நிலை

## பாதிப்புக்குள்ளான விவசாயிகள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

த்மக்கான வங்கிக் கடன்களை மீளச்செலுத்தத் தவறிய விவசாயிகள், தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை தொடர்வதில் பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக வலிகாமம் தெற்கு விவசாயிகள் வெங்காயச் செய்கையை முன்னெடுக்கவென 2011 ஆம் ஆண்டு வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெற்றிருந்தனர்.

இந்நிதியைக் கொண்டு வெங்காயச் செய்கையை சிறப்பாக முன்னெடுத்திருந்த போதும் பருவம் தப்பிய மழையாலும், வெள்ள அழிவுகளாலும் இச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

பெற்ற கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் தொடர்ந்து பயிர்ச்செய்கைக்காக கடன்களைப் பெறமுடியாத நிலையில் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக சுன்னாகம் பகுதி விவசாய சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வெள்ளப்பாதிப்பை கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து முகம் கொடுத்து வருகிறோம். கடனை மீளச் செலுத்தாமல் போனதில் பயிரழிவுக்காக கிடைக்கும் காப்புறுதியையும் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு இவ் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தில் பெய்த சித்திரை மழையும் கூட எமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தொடர்ந்து நாம் இந் நெருக்கடியை எதிர்கொள் வதால் இதில் தொடர்புள்ள அதிகாரிகள் எமது இக்கட்டான நிலையை புரிந்து கொண்டு இந்த விவசாயிகளுக்கு உதவ முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நாடக விழா



(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடக விழா நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கல்லூரியின் (லண்டன்) பழைய மாணவன் டி.ரவீந்திர மோகன் சிறப்பு விருந்தினராக சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் பி.தயானந்தன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நாடக விழாவில் நாடக அளிக்கைகளாக சம்பந்தர் இல்லம் வழங்கிய புலவர் புகழ் வாகீசர் இல்லம் வழங்கிய கண்ணகி, மாணிக்கர் இல்லம் வழங்கிய பரதன், சுந்தரர் இல்லம் வழங்கிய தக்கன் யாகம் ஆகிய நாடக அளிக்கைகள் இடம் பெற்றன. பெருந்தொகையான நாடக ஆர்வலர்கள் கலந்து கொண்டு நாடகத்தினைக் கண்டு களித்தார்கள். (63)

# அச்சுவேலி தெற்கில் சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு ஜே/286 கிராம சேவகர் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம கிராம சேவகர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அப்பகுதி கிராம சேவகர் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர், பொலிஸ் பொறுப்பதிகாரி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இக் குழுவின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஆவரங்கால் - வல்லை சந்தி வீதியில் வேகமாச் செல்லும் வாகனங்களால் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் அதனைத் தவிர்க்க வேகக்கட்டுபபாட்டை அறிவிப்பதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அக்குழுவின் பிரதிநிதி சி.இரத்தினசிங்கம் சுட்டிக்காட்டினார்.

ஆவரங்கால் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று வரும் மாணவர்கள் வீதியில் நிற்கும் இளைஞர் குழுக்களின் தொல்லைகளுக்குள்ளாவதைம் தவிரக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

வேகமாகச் செல்லும் வாகனங்களால் கால்நடைகள் விபத்துக்குள்ளாகி இறக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதும் இதனைத் தவிர்க்க வேகக்கட்டுபபாட்டை அறிவுறுத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.(18)




மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி வழிபாட்டு மன்றத்தின் திறப்பு விழாவும், கலச விளக்குப் பூஜையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கல்வியங்காட்டில் நடைபெற்ற போது... (137)

## பதிவிறக்கப் பெட்டகம்

உத்தம வில்லன் படம் எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் ஒரு சின்ன சந்தேகம். நடிகர் கமல் இயக்கி [ரமேஷ் அரவிந்த் மன்னிக்க வேண்டுகிறேன்] நடித்திருந்த பகுதியில் இருக்கும் நேர்த்தியும் தெளிவும், அவருடைய குரு நாதராகப் படத்திலும் நிஜத்திலும் அறியப்பட்ட மார்கதர்சி என்னும் பாலசந்தர் இயக்கும் படத்திற்குள்ளான படத்தில் துளியும் இல்லை என்பது தற்செயலானதா என்று தெரியவில்லை. ஒரு உலகத் தரமான படத்தில் வரக் கூடிய ஒரு உபசினிமா [sub-text] எப்படி இவ்வளவு மொக்கையாக வர முடியும் என்பதை நினைத்தால் ஆச்சரியமாக உள்ளது. அதுவும் காமெடி என்ற பெயரில் மரண மொக்கை வேறு. வசூல்ராஜா, பம்மல் கே. சம்பந்தம் நாயகனுக்கா காமெடி எடுக்க வரவில்லை? உண்மையிலேயே மார் கதரிசியின் உத்தமவில்லன் தான் அவருடைய திறமைக்கான அளவுகோலா? உண்மையிலேயே இது பாலசந்தருக்கு அஞ்சலியா? அல்லது, ஐந்து வருடம் கழித்து நமக்கு சிரிப்பு வருமா?

– நெல்சன் சேவியர்

இப்படி ஒரே படத்தில் இரண்டு படங்களின் கதையும் ஒன்றோடு ஒன்று பிரமாதமாக இணைந்த படமாக என் நினைவுக்கு வருவது Jules Dassin 1978-இல் இயக்கிய A Dream of Passion என்ற கிரேக்கத் திரைப்படம். இதுவும் படத்துக்குள் படம் என்ற முறையில் எடுக்கப்பட்டதே. உத்தம வில்லனின் படத்துக்குள் படம் ட்ரீம் ஒஃப் பாஷனில் படத்துக்குள் நாடகம். கி.மு. 431-இல் யூரிப்பிடஸ் எழுதிய கிரேக்க நாடகம் மெடியா. மெடியாவும் ஜேஸனும் கிரேக்கத் தொன்மங்களில் வரும் பாத்திரங்கள். மெடியா ஒரு ஆதிவாசிப் பெண். ஜேஸன் நகரவாசி. மெடியாவைக் காதலித்து மணக்கிறான். சில ஆண்டுகளில் அவனுக்கு மெடியாவின் ஆதிவாசித்தன்மை பிடிக்காமல் போகிறது. அந்த நாட்டு இளவரசியிடம் காதல் கொள்கிறான். மெடியா அவனையும் இளவரசியையும் ஜேஸனுக்கும் தனக்கும் பிறந்த குழந்தைகளையும் கொல்கிறாள். இந்தத் துன்பவியல் நாடகத்தில் மெடியா பாத்திரத்தை ஏற்று நடிக்கிறாள் மாயா என்ற பெண். [சினிமாவில் இந்தப் பாத்திரத்தை நடித்தவர் மெலினா மெர்க்குரி என்ற கிரேக்க நடிகை. இவர் பின்னாளில் கிரீஸின் கலாச்சார மந்திரியாகவும் இருந்தார்.] அவளுக்கும் அந்த நாடக இயக்குனருக்கும் காதல் பிறக்கிறது. ஆனால் இடையிலேயே இயக்குனர் அவளுக்குத் துரோகம் செய்வதை அறிகிறாள். தானும் 2500 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட மெடியா என்ற பெண்ணும் ஒன்றுதானா என்று குழம்புகிறாள்.

இதற்கிடையில் பத்திரிகைகளில் வரும் பரபரப்பான செய்தி ஒன்று அவள் கவனத்தை ஈர்க்கிறது. கணவன் தனக்குச் செய்த துரோகத்துக்காக அவனுக்கும் தனக்கும் பிறந்த குழந்தைகளையே கொன்று விட்டு சிறையில் இருக்கும் ப்ரெண்டா என்ற பெண்ணைப் பற்றிய செய்தி அது. சிறைக்குச் சென்று அவளைச் சந்திக்கிறாள் மாயா. சிறையில் இருக்கும் ப்ரெண்டா ஒரு ஸ்கீஸோஃப்ரீனிக் மனநோயாளியாக இருக்கிறாள். முதல் இரண்டு சந்திப்புகளில் இருவரும் பேச முடியவில்லை. படத்தின் இறுதிக் காட்சியில் மெடியா தன் குழந்தைகளைக் கொன்று அந்தப் பிரேதங்களை ஜேஸனுக்குப் பரிசளித்து விட்டுக் கதறு கிறாள். அந்தக் கதறலில் கிரேக்க நாடாங்களின் புகழ் பெற்ற கோரஸ் இடம் பெறுகிறது. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்க முடியாத காட்சி அது. அதே போன்ற தொரு மகத்தான கலை அனுபவத்தைக் கொடுத்தது உத்தம வில்லனின் மனோரஞ்சனின் வாழ்க்கை பற்றிய பகுதி. உத்தம வில்லனில் மெடியா என்ற கிரேக்கத் துன்பவியல் நாடகத்தின், எ ட்ரீம் ஒஃப் பாஷன் என்ற சினிமாவின் காவியத் தருணங்கள் பல இருந்தாலும் சினிமாவுக்குள் வரும் உபசினிமா – மார்கதரிசியின் சினிமா – சரியாகப் பொருந்தவில்லை. காரணம், பாலசந்தரின் படங்களைப் போலவே அந்தப் பகுதி ஒரு கலா சிருஷ்டியாக வெற்றி அடையவில்லை.

– சாரு நிவேதிதா

# 150கிலோ கஞ்சா வடமராட்சியில் மீட்பு

## 4 பேர் கைது



யாழ்.வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் கடல் வழியாக கடத்தி வரப்பட்ட 150 கிலோ கஞ்சா போதைப்பொருள் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் ஒரு முஸ்லிம் நபர் உட்பட 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை கடல் வழியாக கஞ்சா கொண்டு வரப்படுவதாக படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அதிகாலை 4.30 மணியளவில் குறித்த போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் போதைப் பொருளை இறக்கிக் கொண்டிருந்த ஒரு முஸ்லிம் நபர் உட்பட 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# முல்லைமாவட்ட செயலகத்தில் மீள்குடியேற்றக் கூட்டம்

## முடிவுகள் எட்டப்படவில்லை



(முல்லைத்தீவு)

மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கூட்டமொன்று முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் மற்றும் 59ஆவது படைப்பிரிவு அதிகாரிகள், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கொக்கிளாய் காணிப்பிரச்சினை, கொக்குத் தொடுவாய் காணிப்பிரச்சினை மற்றும் கேப்பாபுலவு காணிப் பிரச்சினை என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. எனினும் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித முடிவுகளும் எட்டப்படவில்லை.

கூட்டத்தை தொடர்ந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து தெரிவிக்கையில்,

இப்பகுதியில் எமது மக்களின் விவசாய நடவடிக் கைகளில் இராணுவத்தினரின் தலையீடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப் பட்டது. எனினும் இவற்றிற்கு உரிய தீர்வு எட்டப்படாத நிலையில் குறித்த கூட்டம் எமக்கு மனநிறைவை அளிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

# குருப்பெயர்ச்சி

குருபகவான் வாக்கிய பஞ்சாங்க ரீதியாக மன்மத வருஷம் ஆனி 20 ஆம் திகதி 05.07.2015 ஞாயிறு இரவு 11 மணி நிமிடம் 02 க்கு கடகராசியிலிருந்து சிம்மராசிக்குப் பெயர்ச்சியாகிறார்.

# குரு பெயர்ச்சி இராசி பலன்கள்

### மேடம்



குரு பெயரும் இடம்– 5 ஆம் இடம்

பலன்கள்-
எடுத்த காரியம் எதிலும் வெற்றி, குழந்தை பாக்கியம், பணவரவு, புகழ் மரியாதை

பரிகாரம்-
யாகத்தில் பங்குகொண்டு அன்னதானம் செய்து நற்பலனை பெறவும்.

### ரிஷபம்



குரு பெயரும் இடம்– 4 ஆம் இடம்

பலன்கள்-
கழனமான நேரம், உறவினர்கள் பகை, இடமாற்றம் ஏற்படும்.

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும்.

### மிதுனம்



குரு பெயரும் இடம்– 3 ஆம் இடம்

பலன்கள்-
காரியத்தடை, சகோதரன் பகை, திடீர் இடமாற்றம், மனஸ்தாபம், குழப்பம்

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும்

### கடகம்



குரு பெயரும் இடம்– 2 ஆம் இடம்

பலன்கள்-
புதிய தனவரவு, புதிய முயற்சியில் வெற்றி, சுபசெலவுகள், பதவி உயர்வு.

பரிகாரம்-
யாகத்தில் பங்குகொண்டு அன்னதானம் செய்து நற்பலனை பெறல்

### சிம்மம்



குரு பெயரும் இடம்– 1 ஆம் இடம்

பலன்கள்-
உடல் உபாதைகள், தடங்கல் தாமதம், வரவுகள் தடை, கவனம் தேவை.

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும்.

### கன்னி



குரு பெயரும் இடம்– 12 ஆம் இடம்

பலன்கள்-
விரயஸ்தானம், பொருள் நஷ்டம், அதிக செலவு, உடல் நலக்குறைவு.

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும்

### துலாம்



குரு பெயரும் இடம்– 11 ஆம் இடம்

பலன்கள்-
பதவி உயர்வு, அனைத்திலும் வெற்றி, தொழிலில் லாபம், வீடு நிலம் வாங்குதல்.

பரிகாரம்-
யாகத்தில் பங்குகொண்டு அன்னதானம் செய்து நற்பலனை பெறலாம்.

### விருச்சிகம்



குரு பெயரும் இடம்– 10 ஆம் இடம்

பலன்கள்-
தொழிலில் நஷ்டம், தடை காரிய முடக்கம், வேலை ஆட்களால் இடையூறு

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும்.

### தனுசு



குரு பெயரும் இடம்– 9 ஆம் இடம்

பலன்கள்-
பதவி உயர்வு, சாதகமான இடமாற்றம், மரியாதை, புகழ், ஆன்மீக யாத்திரை

பரிகாரம்-
யாகத்தில் பங்குகொண்டு அன்னதானம் செய்து நற்பலனைப் பெறவும்.

### மகரம்



குரு பெயரும் இடம்– 8 ஆம் இடம்

பலன்கள்-
மனச்சோர்வு, கவலை, பயம், துன்பம், பகை, பிணி ஏற்படுதல் புகழ் குறைதல் கவனம்.

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும்.

### கும்பம்



குரு பெயரும் இடம்– 7 ஆம் இடம்

பலன்கள்-
தனம், லாபம், பதவி உயர்வு, வியாபாரத்தில் லாபம் லஷ்மி கடாட்சம் பெறுதல்

பரிகாரம்-
யாகத்தில் பங்குகொண்டு அன்னதானம் செய்து நற்பலனைப் பெறலாம்

### மீனம்




குரு பெயரும் இடம்– 6 ஆம் இடம்

பலன்கள்-
மனச்சேர்வு, பிணி, பகை, இடையூறு வீண் செலவு, கழனமான நேரம்

பரிகாரம்-
குருபகவானுக்கு வியாழக்கிழமை தோறும் நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து கொள்ளவும.

**நற்பலன் பெறும் இராசிகள்-**
மேஷம், கடகம், துலாம், தனுசு, கும்பம்.

**பரிஹாரம் செய்து கொள்ள வேண்டிய இராசிகள் -**
ரிஷபம், மிதுனம்,சிம்மம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம்,



*'தேசமான்ய', பண்டிதர் கலாநிதி*
**து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
சோதிட ஆய்வாளர்
புராதன சிவன் கோவில், சாவகச்சேரி
தொ.இல-- 0771505413

# உ/த. பரீட்சை நேரமாற்றம் இணையத்தளத்தில்

2015 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான மாற்றப்பட்ட கால அட்டவணை www.doenets.lk என்ற இணையத் தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகி 13ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் தொடர்ந்து 17ஆம் திகதி பொதுத் தேர்தலின் பின்னர் மீண்டும் 24ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் 8ஆம் திகதியுடன் நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# பூச்சிகளால் தொல்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நீண்ட காலமாக நிலப்பூச்சிகளின் தொல்லை நீடித்து வருகின்றது இதன் காரணமாக நெடுந்தீவு மக்கள் இரவு வேளைகளில் உறக்கமின்றித் தவிக்கும் நிலை காணப் படுகின்றது.

இந்நிலையினை கருத்திற் கொண்டு சுகாதார அமைச்சும் நெடுந்தீவின் (P.H.I) மேற்கொள்ள வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர.

# தீர்மானத்தில் மாற்றமில்லை

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்பு மனு வழங்குவதில்லை என்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானத்தில் மாற்றமில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்குமாறு மகிந்த ராஜபக்ஷ இதுவரையில் சுதந்திரக் கட்சித் தலைமையகத்திற்கு உத்தியோகபூர்வமாக எவ்வித கோரிக்கையையும் முன்வைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த(சா/த) மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

## G.C.E. (O/L) Examination model Paper

## (1 புள்ளி, 2 புள்ளி திட்ட வினாக்கள்)

**கணிதம்** **பகுதி I**

01. $22_{\text{பத்து}}$ என்பதை அடி இரண்டில் தருக?

..........................................................................

02. $66_{\text{பத்து}}$ என்பதை அடி இரண்டில் தருக?

..........................................................................

03. $100_{\text{பத்து}}$ என்பதை அடி இரண்டில் தருக?

..........................................................................

04. $25_{\text{பத்து}}$ என்பதை அடி நான்கில் தருக?

..........................................................................

05. $1010_{\text{இரண்டு}}$ என்பதை அடி பத்தில் தருக?

..........................................................................

06. $1101_{\text{இரண்டு}}$ என்பதை அடி பத்தில் தருக?

..........................................................................

07. கூட்டுக $101_{\text{இரண்டு}} + 11_{\text{இரண்டு}}$

..........................................................................

08. கூட்டுக $11011_{\text{இரண்டு}} + 1001_{\text{இரண்டு}}$

..........................................................................

09. கழிக்குக $1000_{\text{இரண்டு}} - 11_{\text{இரண்டு}}$

..........................................................................

10. சூத்திரம் $2hR - h^2 = a^2$ இல் R இனை எழுவாயாக்குக

..........................................................................

11. $V^2 = U^2 + 2fs$ இல் S இனை எழுவாயாக்குக

..........................................................................

12. $S = ut + \frac{1}{2}at^2$ இல் $at^2$ a இனை எழுவாயாக மாற்றுக

..........................................................................

13. $V = U + at$ இல் t இனை எழுவாயாக மாற்றுக

..........................................................................

14. $T = 2\wedge\sqrt{\frac{1}{g}}$ இல் I இனை எழுவாயாக மாற்றுக?

15. சுருக்குக $2\frac{1}{3} \times \frac{2}{7} + \frac{1}{4}$

16. பின்வரும் ஈட்டுக்களின் ஆகாரம் யாது?
3, 4, 4, 6, 7, 8

17. $\frac{1}{3}$ இற்கு ஒரு சமவலுப் பின்னத்தைத் தருக

18. கழிக்குக $1100_{\text{இரண்டு}} - 101_{\text{இரண்டு}}$

19. ரூ. 400இன் $\frac{1}{5}$ எவ்வளவு?

20. சுருக்குக $1101_{\text{இரண்டு}} + 32_{\text{நாலு}}$ (விடையை கிடைக்கும் எண்ணின் அடியில் கூறுக)

21. சுருக்குக $\frac{2}{3} - \frac{1}{5} \div 1\frac{2}{5}$

22. சுருக்குக $0.22 \times 1.5 =$

23. $I = a + (n - 1)d$ இல் n ஐ எழுவாயாக மாற்றுக

24. பாத்தி ஒன்றில் உள்ள 10 மிளகாய்ச்செடிகளில் இருந்து நாள் ஒன்றில் பிடுங்கி எடுக்கப்பட்ட மிளகாய்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன
16, 9, 3, 16, 6, 22, 13, 24, 9, 9

இப் பரம்பலின்
i. ஆகாரம்
ii. இடையம் என்பவற்றைக் காண்க

25. சுருக்குக
$\frac{3}{4} \times \frac{2}{5}$ இன் $\frac{3}{5} \times \frac{3}{10}$

26. $(2x + 1) - (x - 9) = 12$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க?

27. சுருக்குக $3.05 \times (2.5 - 1.6)$

28. $10101_{\text{இரண்டு}}$ ஐ அடி 10 இல் உள்ள எண்ணாகத் தருக?


29. $X \geq 2$ என்னும் சமலியை எண்கோட்டில் குறித்துக் காட்டுக?

30. $x + 3 \leq 5$ இன் தீர்வுகளை எண்கோட்டில் குறித்துக் காட்டுக

31. $0 \leq x \leq 3$ இன் தீர்வுகளை எண்கோட்டில் குறித்துக் காட்டுக

32. $-1 \leq x \leq 3$ இனை திருப்தி செய்யும் எல்லா நேர்நிறை எண்களையும் தருக?

33. எண்கோட்டின் மீது வகைக்குறிக்கப்படும் சமனிலையை எழுதுக





34. $\frac{X}{2} + 1 \geq 3$ என்னும் சமனிலியை தீர்த்து X இனை திருப்தி செய்யும் நேர் நிறை எண்கள் மூன்று தருக

35. $X + 3 < 4$ என்னும் சமனிலியை திருப்தி செய்யும் மறைநிறை எண் தொடையில் உள்ள எண்கள் 02 தருக?

36.
$$\begin{array}{r} 101\,x \\ 11\,x \\ \hline BAAAX \end{array}$$
ஆகும் இதற்கேற்ப X, A, B ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க

37. $Xt^2 = P(3 - t^2)$ இல் $t^2$ ஐ எழுவாயாக மாற்றுக

38. எண்கோடின் மீது வகைக்குறிக்கப்பட்டுள்ள சமனிலியை எழுதுக?




39. பின்வரும் தண்டு - இலை வரைபில் எத்தனை ஈட்டுக்கள் உள்ளன

| தண்டு | இலை |
|---|---|
| 1 | 2, 8 |
| 2 | 2, 5, 6 |
| 3 | 6, 7 |
| 4 | 1 |

40. 5 - 15 என்ற வகுப்பாயிடையின் பருமன் யாது?

41. $1 + 1 = \sqrt{h^2 + x^2}$ என்னும் சூத்திரத்தில் X இனை எழுவாயாக்குக

42. பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக

| வகுப்பாயிடை | மீடிறன் | திரள் மீடிறன் |
|---|---|---|
| 1 - 10 | 05 | 05 |
| 10 - 20 | .......... | 25 |
| 20 - 30 | 15 | 40 |
| 30 - 40 | 10 | ......... |

43. 5 மாணவர்களின் இடைநிறை 50kg ஆகும். இவர்களுடன் புதிதாக 59kg நிறையுடைய புதிய மாணவன் ஒருவன் இணைந்தான். எனின் மாணவர்களின் புதிய இடைநிறை யாது?

44. தீர்க்குக $3x - 2(x - 2) = 3x + 5$

45. சுருக்குக $\frac{3}{5} \div \frac{3}{4} - \frac{7}{10}$

46. தீர்க்குக $\frac{x}{4} + 2x = 9$

47. சுருக்குக் $1 - (0.2 \times 0.4)$

48. உயர்புள்ளி 20ஐப் பெறத்தக்க வினாத்தாள் ஒன்றுக்கு 11 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன
5, 7, 9, 10, 11, 12, 14, 15, 16, 17, 18 இப்பரம்பலின் காலணை இடைவீச்சைக் காண்க

49. $531_{\text{எட்டு}}$ என்னும் எண்ணை அடி இரண்டில் தருக?

50. மாணவன் ஒருவன் மூன்று தவணைப்பரீட்சைகளிலே பாடம் ஒன்றுக்கு முறையே 10 புள்ளிகளில் 6 ஐயும், 15 புள்ளிகளில் எட்டையும் 35 புள்ளிகளில் 20 ஐயும் பெற்றான் அவன் எந்தத் தவணைப் பரீட்சையில் கூடுதலான புள்ளியைப் பெற்றான்?

51. காரணிகாண்க $2xy - y$

52. காரணிகாண்க $p^2 - 4$

53. காரணிகாண்க $x^2 - 36$

54. காரணிகாண்க $4x^2 - 25$

55. காரணிகாண்க $2x + 4$

56. காரணிகாண்க $3x + 6xy + 1 + 2y$

57. காரணிகாண்க $x^2 + 5x + 6$

58. காரணிகாண்க $2a - a^2$

59. காரணிகாண்க $2ab + 3a$

60. காரணிகாண்க $a^3 - b^3$

61. காரணிகாண்க $2x^2 + x - 6$

62. காரணிகாண்க $x^3 + y^3$

63. காரணிகாண்க $2xy + y$

64. காரணிகாண்க $3a^2 - 27$

65. காரணி பற்றிய அறிவைப்பயன்படுத்தி சுருக்குக

$\sqrt{52.5 \times 47.5 + 6.25}$

66. காரணி பற்றிய அறிவைப்பயன்படுத்தி சுருக்குக

$\sqrt{30 \times 20 + 25}$

67. காரணி பற்றிய அறிவைப்பயன்படுத்தி சுருக்குக

$99 \times 101$

68. தீர்க்குக

$\frac{3x + 2}{4} = x - \frac{2}{3}$

69. $a^2 - b^2 = (a + b)(a - b)$ என்னும் தொடர்பைப் பயன்படுத்தி $58^2 - 8^2$ இன் பெறுமானம் காண்க

70. $y^2 = (x - a)^2 + 3$ என்னும் சூத்திரத்தில் x ஐ எழுவாயாக்குக

71. காரணி காண்க $x(x + 3y) - 28y^2$

72. காரணி காண்க $P^2 - 25$

73. காரணி காண்க $a^2 + 3a - 3 - a$

74. காரணி காண்க $2x^2 - 4x - 48$

75. $x^2 + 2x + 35$ இன் ஒரு காரணி $(X + 7)$ ஆகும் அதன் மற்றைய காரணியை காண்க


76. காரணி காண்க $x^2 - y^2$

77. $a^2 - b^2 = (a - b)(a + b)$ ஐப் பயன்படுத்தி $53^2 - 43^2$ இன் பெறுமானம் காண்க

78. $x^2 + 7x + 12$ இன் ஒரு காரணி $(X+4)$ ஆயின் மற்றைய காரணியைக் காண்க

79. $x^2 + 5x + 4$ என்னும் அட்சரகணித கோவையை $(X+2)$ இனால் வகுக்கும் போது கிடைக்கும் மீதி எவ்வளவு?

80. கீழே தரப்பட்டுள்ள ஆள் கூற்றுத்தளத்தில் (2,3) என்னும் புள்ளியைக் குறித்து காட்டுக




81. ஆள் கூற்றுத்தளத்தில் X அச்சுக்கு சமாந்தரமாக 2 என்னும் புள்ளிக்கூடாக செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

82. ஆள் கூற்றுத்தளத்தில் Y அச்சுக்கு சமாந்தரமாக (-3) என்னும் புள்ளியின் ஊடாக செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

83. $Y = 2x - 1$ என்னும் நேர்கோட்டு சமன்பாட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க

84. $3Y + 2x + 1 = 0$ என்னும் நேர்கோட்டு சமன்பாட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க


85. $2Y = 4x + 7$ என்னும் நேர்கோட்டு சமன்பாட்டின் படித்திறன், வெட்டுத்துண்டு என்பவற்றைக் காண்க

86. (3,3), (2,2) என்னும் புள்ளிகளுக்கு ஊடாக செல்லும் நேர்கோட்டின் படித்திறன் யாது?

87. உருவில் தரப்பட்ட நேர்கோட்டின்

i. வெட்டுத்துண்டு யாது?

ii. படித்திறன் யாது?




88. (-3, 0), (0, -2) என்னும் புள்ளிகளுக்கு ஊடாகச் செல்லும் நேர்கோட்டின்

i. படித்திறன் யாது?

ii. வெட்டுத்துண்டு யாது?

89. சமன்பாடு $3y + x - 5 = 0$ இனால் தரப்படும் நேர்கோட்டின் படித்திறன் யாது?

90. படித்திறன் $\frac{1}{3}$ ஐ உடையதும் புள்ளி (0, -2) இனூடாக செல்வதும் ஆன நேர்கோட்டின் சமன்பாடு யாது?

91. படித்திறன் 2 ஆகவும் வெட்டுத்துண்டு -5 ஆகவும் உள்ள ஓர் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

92. காரணி காண்க $2x^2 + xy - 2ax - ay$

93. $2x - y = 1$ இனால் காட்டப்படும் நேர்கோட்டின் படித்திறன் யாது?

94. (0,3) (5,8) என்னும் புள்ளிகளுக்கூடாகச் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

95. படித்திறன் $\frac{1}{4}$ ஐ உடையதும் புள்ளி (0, -2) இனூடாகச் செல்வதும் ஆன நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக ?

96. சுருக்குக $\frac{1}{4} \times \left(\frac{1}{3} + \frac{2}{5}\right)$


97. சுருக்குக $\left(\frac{2}{3} - \frac{1}{5}\right) \div 1\frac{2}{5}$

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள் (தரம் - 05)

| | | | |
|---|---|---|---|
| (01) 1. ii | 2. iii | (02) 3. iv | 4. iv |
| (03) 5. 2, 3, 4, 1, 5 | | 6. 3, 5, 2, 4, 1 | (04) 7. i |
| 8. i | (05) 9. iv | 10. ii | (06) 11. ii |
| 12. i | (07) 13. 1 | 14. 2 | 15. 2 |
| (08) 16. iii | 17. ii | 18. iv | 19. ii |
| 20. 3 | 21. 2 | 22. 3 | 23. 2 |
| 24. 1 | (09) 25. i | 26. ii | 27. iii |
| 28. i | | | |

### சென்றவாரம் பிரசுரமாகிய க.பொ.த (சா/த) வினாக்களின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (01) 1.120.00 | 2.15 ரூபா | 3.38.00 | 4.350.00 |
| 5.150 கலோரி | 6.7188 பரீட்சார்த்திகள் | | 7.18.00 |
| 8.90 | 9.41 ஓட்டங்கள் | | 10.34.00 |
| 11.0.75kg or 750g | 12.12.00 | 13.பி.ப1.40 | 14.1.5kg |
| 15.1.25m | 16.6.75L | 17.19 | 18.225cm |
| 19.500g | 20.2000mg | 21.2000ml | 22.8 ரூபா 40 சதம் |
| 23. 20.00 | 24.1t | 25. 30.00 | 26. 2.5t |
| 27.200kg | 28. $x = 6$ | 29. $x = 2$ | 30. $x = 5$ |
| 31. $x = \frac{10}{3}$ | 32. $x = 2$ | 33. $x = 4$ | 34. $x = 3$ |
| | 35. $x = 3$ | 36. $x = 4$ | 37. $k = 15$ |
| 38. $x = 2$ | 39. $x = -\frac{1}{2}$ | 40. $x = 6$ | 41. $a = 9$ |
| 42. $x = 2$ | 43. 0.5 | 44. $x = 5$ | 45. $x = -3$ |
| 46. $x = 9$ | 47. $x = 30$ | 48. $x = 3$ | 49. $x = 1$ |
| 50. $x = +2$ | 51. $x = -\frac{45}{26}$ | 52. 12 | 53.10 வயது |
| 54. 110 ரூபா | 55. 200 | 56. 15.05 | 57. 2.4 |
| 58. 0.06 | 59.1.221 | 60. 100 | 61. 100 |
| 62. 4 | 63. நிழற்றவும் | 64. நிழற்றவும் | 65. 5 |
| 66. $A^1 = \{1, 3, 5\}$ | 67. 4 | 68. $\frac{1}{6}$ | 69. $\frac{3}{65}$ |
| 70. $\frac{1}{5}$ | 71. $\frac{1}{6}$ | 72. $\frac{2}{25}$ | 73. $\frac{13}{15}$ |
| 74. $1\frac{1}{5}$ | 75. $\frac{1}{3}$ | 76. $P^1 = \{C\}$ | 77. 1: 4 |
| 2. 4 | 78. நிழற்றவும் | 79. $\frac{3}{6}$ | 80. $\frac{2}{5}$ |
| 81. (உரு) | | 82. $\frac{5}{10}$ | 83. 2 |
| | | | 84. வரைவுக்குறி காட்டுக |




| | | | | |
|---|---|---|---|---|
| 85.4 | 86. 5 | 87. 10 | 88. 2 | 89. $x = 6$ |
| 90. $x = 6$ | | | | |

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை பிரசுரமாகும் க.பொ.த (சா/த) வினாத்தாளுக்கான விடைகள் யாவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிரசுரமாகும்.





கிளிநொச்சி மாவட்டத்தில் தீடீரென கிளிநொச்சி மகா வித்தியாலயம், பாரதி வித்தியாலயம், ஆகிய இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதனை கண்டித்து அந்தந்த பாடசாலைகளின் சமூகம் நேற்று கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டது. இதில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவர்கள் பாடசாலையின் வாயிலைப் பூட்டி புதிய அதிபரை உள்வர விடாது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதனையும் வலயக் கல்விப்பணிப்பாளர் முருகவேல் மாணவர்களுடன் சமரசத்தில் ஈடுபடுவதனையும் புதிதாகப் பொறுப்பேற்று வருகை தந்த அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் வெளியில் காத்திருப்பதனையும் காணலாம் (29)

# வீதி அபிவிருத்தியில் தமது பகுதிகளுக்கு சபை உறுப்பினர்கள் முன்னுரிமை

## வடமராட்சி மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தியில் தமது வதிவிடம் மற்றும் கிராமத்துக்கான வீதிகளையே பிரதேச சபை உறுப்பினர்கள் முன்னுரிமைப்படுத்துவதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு முன்னரும் அவ்வாறே சமகாலத்திலும் வீதி அபிவிருத்தியில் தமது பகுதி வீதிகளிலேயே இந்த பிரதேச சபை உறுப்பினர்கள் ஆர்வம் காட்டுவதாக அவரகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்பிரதேசத்தில் பின் தங்கிய பகுதிகளில் கூடுதலான மக்கள் பயன்படுத்தும் பல வீதிகள் பாவனைக்குட்படுத்த முடியாத அளவுக்கு மிக மோசமான நிலையில காணப்படுகின்றன.

ஆனால் இந்த வீதிகள் குறித்து சபைக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்படுவதில்லை. தாம் கூடுதலாக பயன்படுத்தும் வீதிகளுக்கு மாத்திரமே நிதியை ஒதுக்குவதாக நெல்லியடி கரணவாய் பகுதியில் உள்ள அமைப்பின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இவ்வாறான பாரபட்சமான நடவடிக்கையை தவிர்த்து வீதி அபிவிருத்தியில் பின் தங்கிய பிரதேசங்களை முன்னிலைப்படுத்தக் கோரி 55பேரின் கையொப்பங்களுடன் பிரதேச சபை தவிசாளருக்கு மகஜர் கையளிததும் பலனேதும் கிட்டவில்லையென கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்தின் தலைவர் கு.மகாலிங்கம் தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் காலங்களில் மக்களின் தலைவர்கள் போல பேசுகின்றனர். அதிகாரத்துக்கு வந்ததும் வாக்களித்த மக்களை மறந்து விட்டு தமக்கான சொந்த விடயங்களிலேயே கண்ணும் கருத்துமாக இவர்கள் இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேர்தல் களைகட்டும் இந்த சமகால சூழலில் தமக்கான உண்மையான பிரதிநிதிகளை நிதானமாகச் சேர்ந்து கொண்டு பொது மக்கள் தமது வாக்கைப் பயன்படுத்த வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நவீன மயமாகின்றது வழுக்கையாறு இந்துமயானம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானம் நவீன மயப்படுத்தப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக மயானம் அமைந்துள்ள சூழல் பகுதி சுற்றி வர முட்கம்பி அடித்து எல்லையிட்டு வரையறுக்கப்படவுள்ளது.

வழுக்கையாறு இந்து மயான அபிவிருத்தி சங்க தலைவர் விஸ்வநாதன் இதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளார்.

வலி.மேற்கு பிரதேச சபையிடம் இருந்து பெறும் நில அளவை வரைபடத்திற்கு அமைவாகவே மயான சூழல்பாதுகாக்கப்படவுள்ளது.

இதேவேளை வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானம் அபிவிருத்தி சங்கத் தலைவர் தலக் விஸ்வநாதன் தலைமையில் மீள்புனரமைப்பு பணி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது (92)

# நரசிங்க வைரவர் ஆலயத்தில் வருடாந்த மிருக பலியிடல்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பொன்னாலை ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலயத்தில் வருடாந்த மிருக பலியிடல் வேள்வி யாகம் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதேவேளை பண்ணாகம் பல்லசுட்டி காளி அம்மன் ஆல வருடாந்த மிருக பலியிடல் வேள்வி யாகம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

மேற்படி ஆலயங்களில் வருடாந்த மிருக பலியிடலுக்கான அனுமதியை வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் வழங்கியுள்ளார்.

மேலும் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்புரைகளுக்கு அமைவாக உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிருக பலியிடல் வேள்வி யாகத்தை மேற்கொள்ளலாம் என அறிவித்துள்ளார். இதேவேளை ஏற்கனவே வலி.மேற்கில் 3 ஆலயங்களில் மிருக பலி யிடல் இடம்பெற்று முடிவடைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (92)

# மகிந்தவின் மீள்பிரவேசம் ஐக்கிய தேசியக் கட்சிக்கே நன்மை


## கபீர் ஹாசிம் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள் பிரவேசம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்மை ஏற்படும் வகையில் அமைந்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த போட்டியிடுவது ஐக்கிய தேசியக் கட்சியை பாதிக்காது. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார். தேர்தலின் பின்னர் மகிந்த அரசியல் ரீதியாக குப்பைத் தொட்டியில் வீசி எறியப்படுவார்.

மக்களினால் நிராகரிக்கப்பட்ட கும்பல் ஒன்றுடன் மகிந்த தேர்தலில் போட்டியிடுவதனால், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை உயர்வடையும். ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய வேட்பாளர்களை மக்கள் நிராகரிப்பார்கள். மீண்டும் மகிந்த தேர்தலில் போட்டியிடுவது தார்மீக ரீதியானதல்ல. உச்ச நீதிமன்ற நீதியரசர் ஒருவர் ஓய்வு பெற்றுக் கொண்டதன் பின்னர் மீண்டும் மாவட்ட நீதிமன்றில் கடமையாற்றுவதனைப் போன்ற முயற்சி ஒன்றில் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளதாக கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

# கச்சையுடன் நியமனம் பெற்ற ஜனநாயகக் கட்சி அமைப்பாளர்



(கொழும்பு)

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தமது அமைப்பாளர், வேட்பாளர் தெரிவுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

அந்த வகையில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் நியமனத்தைப் பெற முன்னாள் இராணுவ வீரரும் பிரதேச சபை உறுப்பினருமான ஆர்.அநுர பண்டார கச்சையுடன் வருகை தந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்

பிரதேசத்தில், ஆதி கலாசாரத்தை விரும்புபவராக இவர் அறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிராமசேவகர் இன்மையால் ஈவினை மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

தமதுபகுதிக்கென தனியாக கிராமசேவகர் நியமிக்கப்படாமையால் வலி.தெற்கு ஈவினை பகுதி பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஜே/709 ஈவினை கிராம சேவகர் பிரிவில் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் ஆறு மாதங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ள நிலையில் அவரது வெற்றிடத்துக்கு இன்னும் ஒருவர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை

சுமார் 600 குடும்பங்கள் வதியும் இக் கிராமசேவகர் பிரிவில் புன்னாலைகட்டுவன் வடக்கு கிராமசேவகர் அலுவலகத்திற்கு தாம் செல்ல வேண்டி இருப்பதாக அப் பகுதி பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்

இந்த விடயம் குறித்து வலி. தெற்கு பிரதேச செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற போது மாற்று நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாக அறிய முடியவில்லை என ஈவினை விவசாயிகள் சம்மேளனத்தின் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

குடும்பப்பதிவுகள் உட்பட முதியோர் உதவிகள் கொடுப்பனவுகள் வாழ்வாதார உதவிகள், பிறப்பு, இறப்பு சான்றிதழுக்காக என பல்வேறு தேவைகளுக்காக கூடுதல் சிரமங்களின் மத்தியிலேயே கிராம சேவகரை சந்திக்க வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தவிர உள்ளூரின் சட்ட விரோத மதுபாவனை மற்றும் குற்றச்செயல்களைத் தடுக்க உரிய முன்னேற்பாடுக்காக எமக்கு கிராமசேவகரின் சேவை மிக அவசியமாக உள்ளதாக அவர் கூறினார்.

எமது மக்களின் நிலைமையை கவனத்தில் எடுத்து எமது பகுதிக்கான கிராம சேவகர் வெற்றிடத்தை நிரப்ப சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (18)

# தடைசெய்யப்பட்ட நூடில்ஸ் உண்பதற்கு பாதுகாப்பானது

## இங்கிலாந்து உணவு தரநிலை அமைப்பு தகவல்




(இங்கிலாந்து)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மகி நூடில ஸில் வேதிப்பொருட்களின் அளவு ஐரோப்பிய நாடுகள் அனுமதித்த அளவே இருப்பதாகவும் உண்பதற்கு பாதுகாப்பானது என்றும் இங்கிலாந்து உணவு தரநிலைகள் அமைப்பு (FSA) தெரிவித்துள்ளது.

குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு பிடித்தமான உணவாக விளங்கி வந்த மகி நூடில்சில், காரீயம் மற்றும் மோனோ சோடியம் குளூட்டாமேட் போன்ற இரசாயன பொருட்கள் அதிக அளவில் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் மேகி நூடில்ஸுக்கு இந்தியா முழுவதும் தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்தியாவில் மகி நூடில்ஸ் குறித்த சர்ச்சை எழுந்ததையடுத்து இங்கிருந்து இறக்குமதி செய்யப்படும் மகி நூடில்ஸ்களை ஆய்வுக்குட்படுத்த இங்கிலாந்து உணவு தரநிலைகள் முகமை திட்டமிட்டது. ஆய்வு முடிவுக்கு பிறகு மகி நூடில்ஸ உண்பதற்கு முற்றிலும் பாதுகாப்பானது என்று கூறியுள்ள அந்த அமைப்பு மகி நூடில்ஸிற்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளது.

அதேபோல், வியட்நாம் சிங்கப்பூர், ஆவுஸரேலியா உள்ளிட்ட நாடுகளும் இந்தியாவில் இருந்து இறக்கு மதி செய்யப்படும் மகி நூடில்ஸகள் பாதுகாப்பானது தான் என்று தெரிவித்துள்ளது கவனித்தக்கது. நெஸ்லே இந்தியா நிறுவனம் தற்போது, மகி நூடில்ஸை கனடா, இங்கிலாந்து, சிங்கப்பூர், கென்யா, மற்றும் மூன்றாம் தரப்பு மூலமாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.




உலகச் செய்திகள்

# உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ரூபா 2 இலட்சம் நிவாரணம்

## பிரதமர் மோடி அறிவிப்பு

(இந்தியா)



மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள டார்ஜிலிங்கில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் பலியானவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள பிரதமர் மோடி, இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ 2 இலட்சம் நிவாரணமாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள டார்ஜிலிங், காலிம்போங் மற்றும் குர்ஷியாங ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த பகுதியில் 25 இற்கும மேற்பட்ட இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவில் தற்போது வரை 22 பேர் உயிரிழந்துள்ளனர். 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். 15 பேரைக் காணவில்லை.

மேற்கண்ட துயரச் சம்பவம தொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் ஆழ்ந்த இரஙகலைத் தெரிவித்துள்ளார்.. அவர கூறியுள்ளதாவது:- "டார்ஜிலிங் மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் பொதுமக்கள் உயிரிழந்தது மிகுந்த வேதனை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் . குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து ரூ 2 இல்ட்சம் நிவாரணமாக வழங்கப்படும்" என்று அதில் தெரிவித்துள்ளார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ் இற்கு சவாலாக ஜெய்ஸ் அர்-இஸ்லாம் அமைப்பு



(சிரியா)

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக ஜெய்ஸ் அல் இஸ்லாம் என்ற அமைப்பு களமிறங்கியுள்ளது. சிரியாவில் சுமார் 25 ஆயிரம் பேருடன் இந்த இயக்கம் உருவாகியுள்ளது, தங்களை இஸ்லாமிய மார்க்கத்தின் இராணுவம் என கூறிக்கொள்ளும் இவர்கள், ஐ.எஸ. ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஐ.எஸ் தீவிரவாதிகள், பிற மதத்தவர்களையோ அல்லது, பிற நாட்டு பிணையக் கைதிகளையோ பிடித்து, ஒரேஞ்சு வண்ண ஆடை உடுத்தச் செய்து, கழுத்தறுத்துக் கொலை செய்வது வழககம். அதற்கு பதிலடியாக ஜெய்ஸ அல்-இஸ்லாம் அமைப்பால் ஐ.எஸ. ஐ.எஸ் தீவிரவாதிகள் சிலர் பிடிக கப்பட்டு, அவர்களுக்கு கறுப்பு ஆடை அணிவித்து, ஜெய்ஸ் அல்-இஸ்லாம் தீவிரவாதிகள் ஒரேஞ்சு ஆடை அணிந்து கொண்டு, துப்பாக்கியால் பின்னந்தலையில் சுட்டு துடிக்க துடிக்ககொன்றுள்ளனர்.

தீவிரவாதிகளின் கழுத்தை அறுக்கும் முன்பாக, ஜெய்ஸ் அல இஸ்லாம் குழுவின் கெமாண்டர் உருது மொழியில் "அல்லா எந்த ஒரு நோயையும் மருந்து இல்லாமல் உருவாக்குவதில்லை" இவ்வாறு கூறிவிட்டு சுட்டுக்கொல்ல சகாக்களுக்கு உத்தரவிடுகிறார். தற்போது இந்த வீடியோ ஐ.எஸ. ஐ.எஸ் தீவிரவாதிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# செங்கற்கள் திருடப்படுவதால் சீனப் பெருஞ்சுவர் சேதம்

(சீனா)

மக்கள் அக்கறையின்றி செங்கற்களை திருடிக் கொண்டு போவதால் சீன பெருஞ்சுவரின் 30 சதவீத பகுதி சேதமடைந்து விட்டதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவர், உலகின் ஏழு அதிசயங்களுள் முதனமையானது. இடைவெளி இல்லாமல் ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்கள் நீளம் கொண்டச்ன பெருஞ்சுவர், சான்காய்குவானில் இருந்து ஜியாயூகுவான் வரை இருக்கிறது. எந்திரங்கள் பயன்பாடு அறவே இல்லாத அந்த காலகட்டத்தில் முற்றிலும் மனிதர்கள் உழைப்பைப் பயன்படுத்தி கட்டப்பட்டது.

இந்த சுவரின் கட்டுமானப்பணிகள் கி.மு. 3-ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது. 21 ஆயிரம் கிலோ மீற்றருக்கு மேலுள்ள இந்த சுவரில், மிங் வம்சத்தினர் கி.பி. 1368 முதல் 1644ஆம் ஆண்டு வரை சுமார் 6 ஆயிரத்து 300 கிலோ மீற்றர்கள் கட்டினர். இதில் 1,962 கிலோ மீற்றர்கள் நள்ம் காற்று, மழை போன்ற இய ற்கை தாக்குதல்களால் சேதமடைந்துள்ளது. தற்போது மக்களும் சுற்றுலாப்பயணிகளும் பொறுப்



பின்றி செங்கற்களை உருவிக் கொண்டு போவதால், பழமைய வாய்ந்த சீன பெருஞ்சுவரின் 30 சதவீத பகுதிகள் சேதமடைந்துள்ளன.

அண்மைக் கர்லமாக சீனப் பெருஞ் சுவரைக் காண சுற்றுலாப் பயணிகள் வரத்து அதிகரித்து வருகிறது. அப்படி வருபவர்களும் பொறுப்பற்றத் தன்மையாக இருக்கின்றனர்" என்று கூறியுள்ளது. தற்போது சீன பெருஞ சுவரில் செங்கற்களை திருடுபவர்களுக்கு 5 ஆயிரம் யுவான் வரை அபராதமாக விதிக்கப்படுகிறது. எனினும் செங்கற்திருட்டு குறைந்தபாடில்லை.

# ஏமன் சிறையில் தாக்குதல் 1200 கைதிகள் தப்பியோட்டம்.

(ஏமன்)

ஏமனில் அல்-கொய்தா தீவிரவாதிகளால் சிறை தகர்க்கப்பட்டு அங்கிருந்த சுமார் 1200 கைதிகள் தப்பி ஓடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏமனின் மத்திய நகரான தாய்ஸில் உள்ள சிறையில் அல்-கொய்தா தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தி, சிறையைத் தகர்த்துள்ளனர். ஏமனில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடிய மிகப்பெரிய சிறை தகர்ப்பு இதுவென தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எவ்வாறு சிறை தகர்க்கப்பட்டது என்பது தொடர்பில் தகவல் இல்லை. சிறையில் போதிய பாதுகாப்பு வசதி இன்மையே இதற்குக் காரணம் என கூறப்படுகிறது.

அபேத்ரப்போ மன்சூர் காதி உள்ளார். மன்சூர் அரசுக்கு எதிராக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கடநத செப்ரெம்பர் மாதம் முதல் போராடடத்தை முன்னெடுத்து வருகின்றனர். முன்னாள் அதிபர் அலி அப்துல்லாவின் ஆதரவாளர்களும், ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களுமான இந்த ஹவுத்தி படையினருக்கு ஈரான் ஆதரவு அளித்து வருகிறது. இதனால் ஏமனின் பல்வேறு பகுதிகளில் தாக்குதலை தொடங்கிய இவர்கள், கடந்த மாதம் தலைநகர் சனாவை கைப்பற்றியதுடன், சன்னி பிரிவினரின் பகுதிகளை நோக்கி முன்னேறத் தொடங்கினர.

சவுதி அரேபியப் படைகளுடன், கட்டார், ஜோர்தான், குவைத், பஹ்ரைன், எகிப்து, மொராக்கோ உடபட 10 நாடுகளின் படைகளும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டது. பின்னர் ஐ.நா.வின் தலையீட்டைத தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. இருப்பினும், ஏமனில் அல்-கொய்தா தீவிரவாதிகள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவே செயல்பட்டு வருகின்றனர்.

ஏமனில் சிலபகுதிகளை தங்கள் கைவசம் கொண்டு வந்துள்ள அவர்கள் அவ்வப்போது சிறைகளில் தாக்குதல் நடத்தி, தங்களது இயக்கத்தின் ஆதரவாளர்களை வெளியே கொணடு வருகின்றனர். கடந்த மார்ச் மாதம சவுதி அரேபியா தாக்குதலைத் தொடங்கியதில் இருந்து சுமார் 3 மிகப்பெரிய சிறை தகர்ப்பு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

# எஸ்.எம்.எஸ்ஸின் தந்தை மக்கொனென் மரணம்



எஸ்.எம்.எஸ் என்றழைக்கப்படும் குறுஞ்செய்திகள் 'செல் போன்களில் அனுப்பும் முறையை முதன முறையாக மட்டி மக்கொனென் எனபவர் கண்டுபிடிததார.

63 வயதான இவர் பின்லாந்தைச் சேர்ந்தவர். கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட இவர் நீண்ட நாட்களாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். 20 ஆம் நூற்றாண்டின் மிக முக்கிய கண்டு பிடிப்பாக எஸ்.எம்.எஸ் திகழ்கிறது. எனவே, இவர் எஸ்.எம்.எஸ் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

# மகிந்தவை தோற்கடிக்க உபாயம் தேடும் முயற்சி

## ரணில் - சந்திரிகா அவசர சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் கொழும்பில் நேற்று விசேட சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு அணியாகப் பிரிந்து போட்டியிட்டால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தரப்பு போட்டியிடுவதாக அறிவித்துள்ள நிலையில் இந்த அவசர சந்திப்பு நடந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க பொதுவான கூட்டணி ஒன்று அமைக்கப்பட்டதைப் போன்று நாடாளுமன்றத் தேர்தலிலும் பொதுக் கூட்டமைப்பு ஒன்றை அமைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## அரச வாகனங்களை தேர்தல் பிரசாரத்துக்கு பாவித்தால் கட்டணம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பவர்கள், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரச வாகனங்களை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தினால் அதற்கான கட்டணங்களை அறவிடுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சுகளின் செயலாளர்களுக்கு பணித்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக அமைச்சர்கள், அரசாங்கத்தின் வாகனத்தை பயன்படுத்தினால் அதற்கான கட்டணங்களை அறவிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே யோசனையை முன்வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, தற்போதைய அரசாங்கத்தில் இருக்கின்ற அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு சரிபாதியாக குறைக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## மகிந்த...

கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டணி தொடர்பான முடிவு இன்று அல்லது நாளை வெளியிடப்படும் என்று தென்னிலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, புதிய கூட்டணி ஒன்றிலேயே மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு புதைகுழி தோண்டியவர்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதை விட, தனது விசுவாசிகளை மட்டும் கொண்ட கூட்டணியில் போட்டியிடுவது நல்லது.

ஆனாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு மகிந்த ராஜபக்ஷ வெளியேறமாட்டார். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் கூட ஒருமுறை, வேறு சின்னத்தில் போட்டியிட்டிருக்கிறார் என்றும் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பவற்றில் விமல், கம்மம்பில குழு போட்டியிடுவதற்கு மைத்திரி குழு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதனால், மகிந்த சார்பு குழு தனியாக வேட்பாளர் பட்டியல் தயாரித்து வருவதாக தெற்கு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதியினதும் தற்போதைய ஜனாதிபதியினதும் குழுக்கள் ஒரே வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் தோல்வியடைந்துள்ளதாக மகிந்த சார்பு குழு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இரு குழுக்களும் ஒரே வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவதாயின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோருக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்க முடியாது என்ற நிபந்தனையொன்றை ஜனாதிபதி தரப்பில் முன்வைத்துள்ளனர். இதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மூவருக்கு...

இச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக யாழ். மேல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது.

இவ்வழக்கு தீர்ப்பிற்காக நேற்று யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணைகளின் முடிவில் மன்றில் ஆஜர் செய்யப்பட்ட இருவரையும் மன்று குற்றவாளியாக கருதி இருவருக்கும் மரண தண்டனை விதிப்பதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி மந்துவில் கிழக்கு கொடிகாமம் பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட் தகராறு காரணமாக இளையவன் குஞ்சையா என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் ஆனந்தம் ஏஸ்லிம் (வயது - 41) என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது.

குறித்த வழக்கினை தொடர்ச்சியாக தற்போது வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக உள்ள அ.பிரேமசங்கர் விசாரணை செய்த காரணத்தினால் இவ் வழக்கிற்கான தீர்ப்பினை வழங்குவதற்கு விசேட நீதிபதியாக பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதன்படி நேற்று குறித்த வழங்கு தீர்ப்பிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட விசாரணையின் போது மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர் குற்றவாளியாகக் கண்டு அவருக்கு மரண தண்டணை விதித்து நீதிபதி தீர்ப்பளித்திருந்தார். (25)

## மகிந்தவை...

இதேவேளை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் பலர் சமல் ராஜபக்ஷவை பிரதமராக்கும்படி ஜனாதிபதிக்கு அழுத்தம் பிரயோகித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாக மெதமுலனவில் வைத்து நேற்று தெரிவித்திருந்தார். இந்த நிகழ்வில் சமல் ராஜபக்ஷவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ரணிலுடன்...

போட்டியிடவே திட்டமிட்டிருந்தது என்றும், ஆனால் ஐ.தே.க.வுடன் இணைந்து போட்டியிடுவது நல்லது என்று பின்னர் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடலொன்று நேற்றுக் காலை ஸ்ரீகொத்தாவில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் ஆகியோரும் பங்குபற்றியுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியோடு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடுவது பற்றி ஆராயப்பட்டதாக தெரியவருகிறது. இப்பேச்சுவார்த்தை நம்பிக்கையூட்டுவதாகவும், திருப்தியளிப்பதாகவும் அமைந்ததாக கூறப்படுகிறது.

அத்துடன், நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் சார்பில் அதன் பிரதிநிதிகளாக அஷ்ஷெய்க் நஜா முஹம்மத், சிராஜ் மஹ்ரூர் ஆகியோர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை வியாழன் பிற்பகல் அவரது இல்லத்தில் சென்று சந்தித்து எதிர்வரும் தேர்தலில் கருத்தொற்றுமையுடனும், இணக்கப்பாட்டுடனும் செயலாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

இதில் கல்முனை முதல்வரும், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகமுமான நிசாம் காரியப்பரும் பங்குபற்றியுள்ளார்.

## தேர்தலில்..

தென்னிலங்கையில் பெரும் போட்டியாக இருக்கும். குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாக்குகள் இரண்டாக உடையும் வாய்ப்புள்ளதுடன், இதனை சாதகமாக பயன்படுத்தி ஐ.தே.கட்சி அதிக வாக்கு பெறும் நிலை உருவாகலாம் என்றார்.

கடந்த ஆட்சியின் போது மேற்கொண்ட ஊழல்களை மூடிமறைப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கு வர முயற்சிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் குடும்பம் உட்பட அந்த அரசில் அங்கம் வகித்த பெரும்பாலானவர்கள் ஊழல் மோசடிகளில் சிக்கியவர்களே. இவர்களின் ஊழல்கள் நடைமுறை அரசின் மூலம் வெளிக்கொண்டு வரப்பட்டால், அதனைத் தடுப்பதற்கான வழியாக மகிந்த மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

தேர்தலில் வெற்றிபெற்று தம்முடைய ஊழல்களை மறைப்பதற்கு தன்னை ஒரு ஜனநாயகவாதியாகவும், ஊழலற்றவராகவும் சிங்கள மக்கள் மத்தியில் காட்டி மீண்டும் அதிகாரத்துக்கு வரப் பார்க்கின்றார். உண்மையில் இவர் ஊழலற்றவர் என்றால், அவர் உட்பட அவர் குடும்பத்தின் மீது சுமத்தப்பட்ட ஊழல்களுக்குப் பதிலளித்துவிட்டு தேர்தலில் போட்டியிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடவுள்ளதாக மகிந்த அறிவித்துள்ளமை தொடர்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டார்.

## மக்களை...

தெரிவித்த கருத்து செய்தித்தாளில் வந்துள்ளது.

இதில் யார் தவறு செய்துள்ளார்கள் என்பதுதான் பார்க்கவேண்டும். எது உண்மை என்பதை பார்க்க வேண்டும். தங்களுடைய முயற்சியில்தான் இந்த அரசு வந்ததாக சொல்கிறர்கள். அத்துடன் இந்த அரசுடன் தமக்கு இணக்கப்பாடு ஏற்பட்டதாகக் கூறுகிறார்கள். நிலம் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனவர்களை கண்டுபிடித்தல், மக்களின் அரசியல் உரிமை, மக்களின் வாழ்வாதாரம் என பல விடயங்களில் இரகசிய பேச்சுவார்த்தை மூலம் ஒரு இணக்கம் காணப்பட்டால்தான் இந்த அரசுக்கு ஆதரவளித்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் இப்போது மீண்டும் முணுமுணுக்க தொடங்கிவிட்டார்கள்.

இந்த அரசு மூலம் காணிகளை விடுவித்ததாக தெரிவிக்கிறார்கள். ஆனால் அன்றைய அரசில் விடுவிக்க இனங்காணப்பட்ட காணிகளே விடுவிக்கப்பட்டன. அதிலும் முன்னாள் ஜனாதிபதியின் கையொப்பம் இடப்பட்ட பத்திரங்களே அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடு. ஆனால் இரகசியமாக கூட்டமைப்பினர் இது குறித்து பேசியதாக கூறினாலும் எவரும் விடுவிக்கப்படவில்லை. நிலம் விடுபடவில்லை. இதை மாவை சேனாதிராசாவே சொல்லியிருக்கிறார்.

இரசிய முகாம்கள் பற்றியும் அவை தொடர்பான ஆதாரங்கள் இருப்பதாகவும் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர்களும். முதலமைச்சர் விக்னேஸ்வரனும் பத்திரிகைகளுக்கு சொல்கிறார்கள். ஆனால் பிரதமரிடம் இதுபற்றி நான் கேட்டதற்கு அப்படி ஒன்றும் இல்லை. அது எல்லாம் பொய் என அவர்களின் முன்னாலேயே தெரிவித்தார். நாடாளுமன்றில் கூட நான் கேட்டதற்கு பிரதமர் இரகசிய முகாம் இல்லை எனவும் அது பொய் எனவும் தெரிவித்தார்.

ஆதாரம் இருப்பதாக தெரிவித்தவர்கள் ஏன் நிரூபிக்கவில்லை. வெறும் அரசியல் காரணத்திற்காகத்தான் இவ்வாறு சொல்கிறார்கள். மக்களை ஏமாற்றத்தான் இவ்வாறு சொல்கிறார்கள். இதைப் புரிந்துகொள்ள வேண்டும். சம்பூர் நிலம் விடுவிப்பு பற்றி நீதிமன்ற வாயிலில் சம்பந்தனும் சுமந்திரனும் சவடால் அடித்து பேசினார்கள். ஆனால் அது விடுபடவில்லை. இது 19 ஆவது திருத்தத்திற்கு முன் செய்திருக்க வேண்டும். இது இவர்களுக்குத் தெரியாதா?

இவற்றை எல்லாம் தெரிந்து செய்கிறார்களா? தெரியாமல் செய்கிறார்களா என்பதுதான் புரியவில்லை.

1000 ஏக்கர் விடுவிப்பதாக இவர்கள் சொன்னார்கள். ஆனால் எம்மால் பேசி இணங்கப்பட்ட இடங்களே விடுவிக்கப்பட்டன. அன்று தேர்தல் வந்ததால் எம்மால் வழங்கமுடியாது போய்விட்டது.

தேசியத்தை கத்திக்கொண்டு வலம் வருவதற்காகவே அன்று தமிழ்த் தேசவிரோத கூட்டத்தை கூட்டமைப்பாக புலிகள் கட்டியெழுப்பினார்கள். அதிலும் அவர்களின் 'பிஸ்ரல் குழு' வில் பெயர் உள்ளவர்களே இவர்கள். ஆனால் 2009 இல் இறுதி யுத்தத்தின்போது இந்தியா யுத்தத்தை நிறுத்த பேசுவதற்கு கூட்டமைப்பினரை அழைத்த போதும் அவர்கள் செல்லாது யுத்தத்தை நிறுத்தினால் வருவோம் எனத் தெரிவித்தனர். ஏனெனில் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே. இதுதான் உண்மை.

விக்னேஸ்வரன் அண்மையில் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். தமிழத் தேசியக் கூட்டமைப்பினர் அரசிடம் பணம் பெற்றுள்ளனர். ஜனாதிபதிக்குத் தெரியாமல் பிரதமரிடமும், பிரதமருக்கு தெரியாமல் ஜனாதிபதியிடமும் வாங்கியுள்ளனர். இதற்கான கணக்கு வழக்கு கேட்டுள்ளார். ஆனால் இதுவரை சரியான பதில் வரவில்லை. ஒருவர் சொல்லியிருக்கிறார் தான் வாங்கவில்லை. மற்றவர்கள்தான் வாங்கினார்கள் என்று. சிலர் தவிர்க்க முடியாமல் ஏற்றுக்கொண்டும் இருக்கிறார்கள். மக்களின் பெயரால்தான் வாங்கியிருக்க முடியும். இதற்கான கணக்குகள் எங்கே?

இன்று கூட்டமைப்பை பொறுத்தவரையில் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு தேர்தல் கூட்டே தவிர மக்களின் நலன்களைப் பாதுகாத்து அதை வென்றெடுக்கின்ற குழுவாக இல்லை. கடந்த 50 வருடங்களாக இவர்கள் எதைச் செய்தார்கள். இருந்ததை பாதுகாத்தார்களா? எதையாவது பெற்றார்களா? எதுவும் இல்லை. ஆனால் தமது நலன்களை மட்டும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பணம் வாங்குகிறார்கள், சொகுசு வாகனம் வாங்குகிறார்கள், இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்துகிறார்கள். லண்டனில் கூட போய் பேசுகிறார்கள்.

இதன் அடிப்படையில் தமிழ்த் தலைமைகளில் ஒரு மாற்றம் ஏற்படாத வகையில் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. வருகின்ற இச்சந்தர்ப்பத்தில் மக்கள் உணர்ந்து சரியானவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எம்மக்களின் அபிவிருத்திப் பணியில் பின் நிற்க முடியாது

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்



முன்னைய காலங்களில் அபிவிருத்திப் பணிகளில் வட மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு விசேட நிதியுதவி மூலம் அதிக நிதிகளை ஒதுக்கீடு செய்து மாவட்டத்தின் அபிவிருததிக்காக நாம் கடுமையாக உழைத்திருக்கிறோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அபிவிருத்தியில் பின் நிற்க முடியாது. அதேவேளை, உரிமைகளையும் நாம் விட்டுக்கொடுக்க முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த முப்பது வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின்போது மக்கள் பல சொத்திழப்புகள் மற்றும் உயிரிழப்புகளைச் சந்தித்துள்ளனர். இந்த இழப்புகளை ஐந்து வருடத்தில் ஈடுசெய்வதென்பது மிகவும் கடினமான பணியாகும். மீள்குடியேற்றத்தின் பின்னரான காலப்பகுதியில் எமது கட்சி பாதிக்கப்பட்ட மக்களைத் தேடிச்சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து அதற்கு தீர்வு கண்டுள்ளது. முழுமையாக மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பினும், ஓரளவு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எனினும், நிரந்தர வீடுகள், வீதி புனரமைப்பு, நிரந்தர தொழில்வாய்ப்பு மற்றும் வாழ்வாதார உதவிகள் உள்ளிட்டவை தேவைப்படுகின்றன. இதனால், தேவைகள் உள்ள சமூகமாகவே மக்கள் உள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த அபிவிருத்திப் பணிகளை சீரான முறையில் வழிநடத்தக்கூடிய நேர்மையான, அர்ப்பணிப்புள்ள அரசியல் தலைமைகளின் செயற்பாட்டாலேதான் அதனை சிறப்பான முறையில் கொண்டுசெல்ல முடியும். இதன் மூலமே மக்களின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்ய முடியும் எனவும்


தமிழ் மக்கள் இவ்வளவு காலமும் தமது வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய, பிரச்சினைகளை தீர்த்துவைக்கக்கூடிய அரசியலை இழந்திருப்பதாகக் கூறிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்களுக்கு வழிகாட்டிய தமிழ் தலைமைகள் மக்களை சரியான பாதையில் வழிநடத்தியிருந்தால் இவ்வாறான இழப்புகளை சந்தித்திருக்கமாட்டார்கள். இவர்களினால் தான் மக்கள் அவலத்தை எதிர்கொண்டனர் எனவும் குறிப்பிட்டதோடு,

தேர்தல் காலங்களில் மட்டும் மக்களிடம் சென்று அவர்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக செல்வார்கள். ஆனால், தேர்தல் நிறைவடைந்தவுடன் அவர்கள், மக்களை மறந்துவிடுவார்கள். ஆனால், நாம் மக்களைத் தேடிச சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து, அவற்றுக்குத் தீர்வுகண்டு மக்களோடு மக்களாக வாழ்ந்துவருகின்றோம் எனவும் தெரிவித்ததோடு,

தேவைகளுடன் வாழும் எமது மக்களுக்கு, மத்தியில் யார் ஆட்சியில் இருந்தாலும், எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுடன் நாம் பேரம் பேசி மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் உட்பட்ட மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதனையே நாம் கடந்தகாலங்களிலும் மேற்கொண்டோம். அதன் மூலம் யுத்தம் காரணமாக அழிவடைந்த எமது மாவட்டத்தை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்சென்றோம். இதன் மூலம் மக்களின் வாழ்வில் ஓரளவேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் மக்களுக்கு தேவைகள் உள்ளன. எனவே, மக்களுக்கான பணி தொடர்ந்தும் இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

மக்கள் தாமே சுயாதீனமாக சிந்தித்து தமது எதிர்காலம் தொடர்பாகவும், தமது பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பாகவும் சிந்தித்து முடிவுகளை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். - திருமலை சாலையில் விபத்து



யாழ் - திருகோணமலை அதிவேக நெடுஞ்சாலையில் பெற்றோல் கொள்கலன் ஒன்றும், முச்சக்கர வண்டியொன்றும் மோதி நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளன.

இவ்விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

திருகோணமலை கன்னியா பகுதியில் யாழ்ப்பாணம் - திருகோணமலை அதிவேக நெடுஞ்சாலையில் தனியார் பெற்றோலிய நிறுவனமான லங்கா IOC நிறுவனத்திற்குச் சொந்தமான பெற்றோல் பவுஸர் ஒன்றும் முச்சக்கர வண்டி ஒன்றும் மோதி விபத்திற்குள்ளானது.

மேற்குறிப்பிட்ட முச்சக்கர வண்டியை பவுஸர் முந்திச்செல்ல முற்பட்ட வேளை முச்சக்கரவண்டி சாரதி திடீரென்று வலதுபக்கம் திரும்பியுள்ளதாகவும் இதனால் கட்டுப்பாட்டை இழந்த பவுஸர் வீதியோரத்தில் குடைசாய்ந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பவுஸரில் பெற்றோல் உள்ளமையினால் தீயணைப்பு மற்றும் அவசர மீட்புக் குழுவினர் விரைந்து தீயணைப்புக்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டனர். தீ பரவக்கூடிய சாத்தியக்கூறு உள்ளமையினால் பொலிஸார் வீதியின் இருமருங்கிலும் போக்குவரத்தை தடை செய்தனர்.

இதன்போது மேற்குறிப்பிட்ட முச்சக்கர வண்டியில் மதுபானப்போத்தல்கள் காணப்பட்டதால் முச்சக்கர வண்டி சாரதிக்கு மதுபோதையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# சமல் ராஜபக்ஷவின் மகன் தேர்தலில் குதிக்க முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்தின் இன்னொரு வாரிசு களமிறங்கவுள்ளது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் மகனும், ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சருமான சசீந்திர ராஜபக்ஷ, இந்த முறை நாடாளுமன்றத் தேரதலில் முதல் தடவையாக போட்டியிடவுள்ளார்.

நேற்று முன்தினம் மெதமுலானவில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடந்த கூட்டத்தில் பங்கேற்ற சசீந்திர ராஜபக்ஷ, நாடாளுமன்றத் தேர்தலில் களமிறங்கப் போவதாகவும், மொனராகல மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதில் கவனமாக இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷ எந்தக் கட்சியில் எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பது குறித்து விரைவில் அறிவிக்கவுள்ளதாகவும் சசீந்திர ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ஷ, சசீந்திர ராஜபக்ஷ ஆகியோர், ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

# யாழ். பல்கலையில் துண்டுப்பிரசுரம் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி அவர்களது உறவினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுத் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்தனர்.

சிறைகளில் நீண்டகாலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளாகிய தங்கள் உறவுகளை விடுவிப்பதற்கு, அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக இருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

## ஸ்டெலா மீது விசாரணை

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் மனைவி ஸ்டெலா ரணதுங்க நேற்று நிதி மோஷடி தொடர்பான பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருட இறுதியில் அல்லது இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோஷடி தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவே இவர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி



(வவுனியா)

வவுனியா உயிரிலை அமைப்பினால் வட -கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 163 பேர் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு கழுத்து மற்றும் இடுப்புக்கு கீழ் இயங்காத நிலையில் இனம்காணப்பட்டுள்ளனர். இன்னல்களை அனுபவித்து வருபவர்களுக்கு இவ் அமைப்பினால் அவர்களுக்கான மருத்துவ உதவிகளை தந்துதவும்படி வட்டு இந்து வாலிபர் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில், கனடாவினைச் சேர்ந்த தனயசிங்கம் பராமநாதன் நேற்று சுமார் 57 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்கியிருந்தார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.